ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தமிழில் வைணவம்

ஆசிரியர்

புவனகிரி

ஸ்ரீமத் அழகியமணவாளராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமிகள்

மாணவர்

வித்வான் கோ. சுந்தரராமாநுஜதாசர் கீரப்பாளையம்.

ஸ்ரீ அம்பாள் பிரஸ், சீர்காழி.

1948.

பதிப்புரிமை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. 1—0—0

அமைந்த பரிபாடல் ஆறு செய்யுட்களின் திரண்ட கருத்துக்கள் அழகாகவும் இனிமையாகவும் விளக்கப்பட்டுள்ளன.

பத்துப்பாட்டினுள் பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி ஆகிய மூன்றனுள் வந்துள்ள சில குறிப்புக்களையும் சிலப்பதிகாரத்திற்காணப்படும் சில செய்திகளையும், திருக்குறளிற் குறிக்கப்பட்ட சிலவற்றையும் கொண்டு வைணவத்திற்குத் தமிழிற் சிறந்த இடம் உண்டு என இந்நூலாசிரியர் காட்டியுள்ளார். அவரது நன்முயற்சியின் பயனாய் எழுந்த இவ்வாராய்ச்சிநூல் பொதுவாகத் தமிழுலகாலும் சிறப்பாக வைணவமக்களாலும் போற்றப்படுமென நம்புகிறேன்.

(ஒப்பம்) அ. சிதம்பரநாதன்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

முன்னுரை.

உலகம் பெரிது; இது காடு, மலை, நாடு, கடல் எனப் பிரிவுற்று மக்கட்கு வேண்டிய பொருள்களைத் தந்து இன்பம் பயக்கின்றது. இப்பிரிவுகளை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பர் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் முதலிய அறிஞர். இவையே நானிலம் எனப்படும். இந்த நான்கு நிலத்திரிபாகிய பாலை என்பதனையும் சேர்த்து நிலம் ஐந்தென்றும் வழங்குவர். நானிலத் திரிபே பாலை என்பது "நானிலம் வாய்க்கொண்டு நன்னீர் அறமென்று கோதுகொண்டு, வேனிலஞ் செல்வன், சுவைத்துமிழ் பாலை" என்ற நம்மாழ்வார் திருவிருத்தச் செய்யுளானும், "முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்து நல்லியல் பழிந்து நடுங்கு துயருறுத்துப் பாலை என்பதோர் படிவங்கொள்ளும்" என்பதற்கு நச்சினார்க்கினியர் கொண்ட கருத்தாலும் நன்கு உணரலாம்.

இவற்றில் வாழும் மக்கள் கடவுள் வழிபாட்டில் வேறுபாடுடையர். முல்லை நிலமக்கள் திருமாலை வழிபட்டு வந்தனர். பின்னர் இவ்வழிபாடு தமிழ் நாடு முழுவதும் பரவுவதாயிற்று. இவ்வழிபாட்டு முறையே இப்போது வைணவ சமயமாக வழங்குகின்றது. இப்போதுள்ள வைணவ சமயக் கொள்கைகளெல்லாம் பண்டைத் தமிழகத்திலிருந்தனவா என்றெண்ண இடமிருப்பினும், வைணவ சமயத்தின் முக்கியமான கொள்கைகள் பண்டைத் தமிழர் கொள்கைகளேயாம் என்பதில் ஐயமின்று. அவைகள்:- சிறப்பாத் திருமாலை வழிபடுதல், தத்துவம் மூன்று என்றல், அதற்கறி

குறியாக முக்கோலேந்துதல், வீடுபெறு ஒரு தனி உலகம், என்றல் முதலியனவாம்.) இவைகள் இந்நூலில் காட்டப்பட்டுள்ளன.

திருமால் நிலை பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என ஐந்து வகைப்படும். பரத்வமாவது விடுபேறாய தனியுலகில் (பரமபதத்தில்) பெருமான் (திருமகள், நிலமகள், நீர்மகள்) ஸ்ரீ பூ நீளா தேவிகளோடு இனிதமர்ந்து மூதுவரான நித்யர்க்கும், கரைகண்டோரான முக்தர்க்கும் காட்சியளித்துக்கொண்டு அவர்கள் பாடல் கேட்டிருக்கும் நிலை; வியூகமாவது ஆர்த்தர் கூப்பீடு கேட்டு அவர்கட்கு அருள்புரிதற்காகவும், உலகத்தின் படைப்பு, அளிப்பு, அழிப்புப்பற்றிச் சிந்தித்தற்காகவும் திருப்பாற் கடலிலே வாசுதேவ, சங்கர்ஷண, பிரத்யும்ந, அநிருத்த மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் நிலை; விபவமாவது ஆர்த்தர் இடர் துடைத்தற்காகவும், அறவோர்க்கு அருள்சுரத்தற்காகவும், அறத்தை நிலை நிறுத்தற்காகவும் தன் இச்சையால் மண்ணுலகில் கொள்ளும் பிறப்பு; அந்தர்யாமித்வமாவது கரந்த சில்லிடந்தோறும் இடந்திகழ் பொருள்தோறும் அவற்றிற்குத் தாரகமாகக் கரந்துறையும் நிலை. அர்ச்சாவதாரமாவது மக்கள் பிறவியஞ்சிறை யறுத்தற்காகத் தக்கபடி காட்சியளித்துக் கடவுளிடத்து ருசியை விளைவிக்கக்கடவதாய், ருசிபிறந்தால் உபாயமாய், உபாய பரிக்ரகம் பண்ணினால் போக்கியமுமாய் கோயில்களிலும் இல்லங்களிலும் தமருகந்த உருவும், பெயரும்கொண்டு விளங்கும்நிலை. நம்மாழ்வார் திருவாய்மொழி 5-9-5 "விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் (அர்ச்சை) கடல் சேர்ப்பாய் மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்" என்ற இடத்து இவற்றை விளங்க அருளிச்செய்துள்ளது காண்க.

மேலும் இவற்றின் உயர்வற உயர்ந்த உண்மைகளை "பூகதஜலம்போலே அந்தர்யாமித்வம், ஆவரண ஜலம்போலே பரத்வம், பாற்கடல்போலே வ்யூகம், பெருக்காறு போலே விபவங்கள், அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம். இதுதான் (இவ்வர்ச்சாவதாரம்) சாஸ்திரங்களால் திருத்த ஒண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரும் சேதனர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைவிக்கக்கடவதாய், ருசிபிறந்தால் உபாயமாய், உபாய பரிக்ரகம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும். பாட்டுக் கேட்குமிடமும், கூப்பீடு கேட்குமிடமும், குதித்த இடமும், வளைத்த இடமும், ஊட்டுமிடமும் எல்லாம் வகுத்த இடமே என்றிருக்கக்கடவன்" என்ற ஸ்ரீவசன பூஷண வாக்ய வியாக்யானங்களில் தெளிவாகக் கண்டுகொள்க.

இவை பரிபாடல் என்னும் பழந்தமிழ் நூலிலும் முறையே தெளிவாகக் கூறியிருப்பன உணரற்பாலன. இவற்றுள் விபவத்தின் உண்மையும் உயர்வும் ஊன்றி யறியாதார் பலபல கூறுப. அவ்வாறு கூறுவது அறியாமையின்பாற்படும் எனப் பகவதகீதை 9-வது அத்யாயம் "அவஜானந்தி ....மமபூத மகேஶ்வரம்" என்னும் 11-வது சுலோகம் தெரிவிக்கின்றது. பரிபாடலும் எம்பெருமானது பல பிறப்புக்களைக் கூறி..........

"இருவர் தாதை இலங்குபூண் மாஅல்
தெருள நின் வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே"

என அப்பெருமானது முதன்மையும், பிறப்பின் உண்மையறிதலின் அருமையும் முதற்பாட்டில் விளக்கி

பின்னர் 'பிறவாப் பிறப்பிலை, பிறப்பித்தோரிலையே' என்று பலபல பிறப்புக்களெடுக்கும் திறனும், அப்பிறப்புகட்கு ஊழ்வினை காரணமல்ல என்பதும், தமது இச்சையே காரணமென்பதும் நன்கு புலப்படுத்தியுள்ளதைக் காண்க. இதனைப் பகவத்கீதை 4-வது அத்யாயமும் கூறுகின்றது. வேதமும் இக்கருத்தை 'அஜாயமானோ பஹுதா விஜாயதே' என்று தெரிவித்துள்ளது. 'பிறப்பில் பல்பிறவிப் பெருமான்' "பிறப்பால் ஒளிவரு முழுநலம்" என்ற திருவாய்மொழித் தொடர்களும் இதனை வலியுறுத்துகின்றன. பகவானது அருஞ்செயல்களாய ஆனைத் தொழில்கள் (அகடிதகடனு சாமர்த்யம்) பலவும் எவரும் உணரும் வகைச் செய்து போந்தது விபவத்திலேயே என்பதனை ஞானிகள் கண்டு உணர்வர். "பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கு அரியவித்தகன்" என ஆழ்வார் மூவாறுமாதம் மோகித்தும் விபவத்திலே.

"பிறந்தவாறும்..........................சேர்வதுவே"

என்ற திருவாய்மொழி (5-10-1) ஐந்தாம் பத்து, பத்தாந் திருவாய்மொழி முதல் பாசுர வியாக்யானத்துள் இவற்றை விளக்கமாகவும் விரிவாகவும் காணலாம்.

தொல்காப்பியர் "மாயோன் மேய காடுறை யுலகமும்" என்றதனால் நிலப் பாகுபாட்டில் திருமால் வழிபாடு முல்லை நிலத்துக்குரியதாகக் கூறினாராயினும் பண்டைக்காலத்துத் திருமால் வழிபாடு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலாகப் பிரிக்கப்பட்ட தமிழ்நாடு முழுவதும் பெருகியிருந்தது என்பது அக்காலத்துத் திருவேங்கடம், காஞ்சீபுரம், காவிரிப் பூம்பட்டினம், திருவரங்கம், திருமாலிருஞ்சோலைமலை, மதுரை, திருவனந்தபுரம், ஆகிய இடங்களில் திருமால் கோயில்கள் சிறந்து விளங்கின எனப் பண்டைத் தமிழ்நூல்கள்

கூறுதலால் அறியப்படும். திருமாலின் ஐம்படைகளைப் பொன்னாற்செய்து தமிழ் மக்கள் அணிந்தனர். மேற்கூறிய திருமால் கோயில்கட்கு அப்பெருமானை வணங்கும் பொருட்டு யாத்திரை செய்தல் உண்டு என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படும்.

தொல்காப்பியம் அகத்திணையியல் 5-ஆம் சூத்திரத்தில் மாயோன் மேய காடுறை யுலகமும் என்ற பகுதியினை யாது பற்றியோ மாயோள் மேய காடுறை யுலகமும் என்று திருத்தப் புகுகின்றனர். சங்க நூல்கள் உரைகள் இவற்றை ஊன்றி நோக்கினால் — சிறப்பாகக் கலித்தொகை முல்லைக் கலியை ஊன்றி நோக்கினால் மாயோள் மேய என்று கூறுவது சிறிதும் பொருத்தமற்றதென்பது புலனாகும். இன்னோரன்ன கருத்துக்களைத் தொகுத்து வெளியிடுதல் இந்நூலின் நோக்கமாகும்.

வைணவர்கள் தமிழ்ப்பற்று மிக்கவர்கள். இன்றளவும் அவர்கள் கோயில்களிலும் இல்லங்களிலும் நடைபெறும் கடவுட்பூசைகளிலும், விழாக்களிலும், சடங்குகளிலும் தமிழ்ப் பாடல்களுக்கே (ஆழ்வார் அருளிச் செயல்கட்கே) முதன்மையளித்துச் சிறப்புச்செய்கின்றனர். இடைக்காலத்துத் தோன்றிய வைணவப் பெருமக்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகச்சிறந்து விளங்கினர் என்பது அவர்கள் உரைகளால் உணரலாம். இன்று ஒருசிலரே சங்க நூல்களைப் பயின்று விளங்குகின்றனர். ஆதலால் பலர்க்கும் பயனளிக்கும்படி சங்கநூல்களில் வைணவ சமயத்தின் தொன்மை விளங்குமாறு காணப்படும் கருத்துக்களைத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும் என்றெண்ணி, தொல்காப்பியம், பத்துப் பாட்டு எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூற்களையாராய்ந்து இந்நூலை எழுதலானேன். இவ்வாறு ஒன்று

எழுதி வெளியிடவேண்டும் என்னும் விருப்பம் எனக்கு நெடுநாளாக உண்டு. இதனை 1940 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ மஹாசங்கத்தின் பதினாறாவது ஆண்டு நிறைவு விழாவில் எனது தலைமையுரையில் தெரிவித்துள்ளேன்.

"திருமாலை வழிபடும் சமயமாகிய வைணவசமயமே இந்நாட்டிற் பெரிதும் பயின்றுவரும் சமயங்கள் பலவற்றுள்ளும் பழமையேயன்றிப் பலபெருமையும் வாய்ந்தது என்பது ஆராய்ச்சியாற் போதரும்" என்று பல்லாண்டுகளாகத் தமிழ்த் துறையில் பலரையும் பழக்கிவரும் தமிழ்ச் செல்வர் ஸ்ரீ-ச-த-சற்குணர் அவர்கள் குறித்துள்ளது சங்க நூலாராய்ச்சியாற் கிடைக்குங் கருத்துக்களோடு ஒத்துள்ளது கண்டின் புறற்பாலது.

இந்த நூல் எழுதுவதற்கு வேண்டும் குறிப்புக்களைத் தொகுத்துத் தந்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர், செந்தமிழ்ச் செல்வர், வித்வான் ஸ்ரீமாந் ஆ பூவராகம் பிள்ளையவர்கள். தமது ஓய்வு நேரத்தில இந்நற்பணிபூண்ட அவர்க்கு எல்லா நலனும் எய்தத் திருமால் திருவருளை வேண்டுகிறேன்.

இதனை அச்சிடுதற்கு உதவிய ஸ்ரீ வைஷ்ணவச் செல்வர்களாகிய புதுவை பாகவதர் ஸ்ரீமாந் துரைரங்க ராமநுஜ சுவாமிகள், சிய்யாழி ஸ்ரீமாந். முத்துசுவாமி நாயுடு அவர்கள், காரைக்கால் ஸ்ரீமாந் ஸ்ரீகாந்தராமாநுசனார் ஆகிய இவர்கட்குக் கடப்பாடுடையேன். மற்றும் இச் செயலில் மனமொழி மெய்களால் உதவிய எல்லோர்க்கும் எம்பெருமான் திருவருள் எய்துவதாக.

சேரப்பாளையம்.
1-5-1946

இங்ஙனம்,
கோ. சுந்தரராமாநுஜன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

தமிழில் வைணவம்.

திருமால் சமயமாகிய வைணவ சமயம் பெருமை வாய்ந்த இப்பரத கண்டத்தின்கண்ணே மிக மிகத் தொன்று தொட்டு விளங்கிவருந் தனிப்பெரும் சமயம் என்பதனை இராமாநுசரும், அவருக்கு முன்புள்ளாரும் பின்புள்ளாருமாகிய சான்றோர்கள் வேதம் முதலிய நூல்கள்கொண்டு மிக நன்றாக அறுதியிட்டு விளக்கியுள்ளனர். அது நிற்க வடவேங்கடந் தென்குமரி யிடைப்பட்ட தமிழ்நாட்டின் கண்ணே பண்டைக்காலத்துத் திருமால்வணக்கமும் வைணவ சமயமும் எங்ஙிலையிலிருந்தன என்பதே ஈண்டு ஆராய்தற்கு எடுத்துக்கொள்ளப் பட்டதாகும்.

இப்போது கிடைக்கப் பெற்றுள்ள தமிழ் நூல்கள் எல்லாவற்றினும் மிகப் பழமை வாய்ந்தது தொல்காப்பியம் ஒன்றேயாகும், அதினினும் பழமை வாய்ந்த நூல் ஒன்று மின்று; புறநானூற்றில் சிற்சில பாடல்கள் தொல்காப்பியத்தினும் முற்பட்டனவாக இருத்தல் கூடும் என்பது ஒரு சிலர் கருத்தாயினும், பலருக்கும் அஃது ஒப்பமுடிந்த துணிபன்று. எனவே தொல்காப்பியத்தினும், அதன் பின் பாடப்பட்டனவாகிய பத்துப்பாட்டு எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் திருமால் வழிபாடும், அங்ஙனம் வழிபடுவோருடைய சமயநிலையும் எங்ஙன மிருந்தன என்று காண்போம்.

தொல்காப்பியர் பொருளதிகாரத் தொடக்கத்தில் நிலத்தை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நான்காகப் பிரித்து, முல்லைக்கு மாயோனும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வம் எனக் கூறினர். இவர்களுள் இந்திரன் வருணன் ஆகிய இரு தெய்வங்களுக்கும் மக்கள் கோயில் அமைத்து வழிபட்டு வந்தமைக்குப்பழைய இலக்கியங்களில் ஆதாரம் காணப்பட்டிலது. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்குரிய வச்சிராயுதம் உள்ள கோயில் ஒன்றிருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனினும், தொல்காப்பியர் கூறியபடி மருதநிலத்து மக்கள் தங்கள் வழிபடுதெய்வமாகக் கொண்டிருந்தனர் என எண்ண இடமின்று.

முல்லை நிலத்து மக்களுக்கு வழிபடு தெய்வம் மாயோன் எனக் கூறினர் தொல்காப்பியர். தொல்காப்பியர் காலத்துக்கு முன் எவ்வளவு காலமாக முல்லை நிலத்து மக்கள் மாயோனைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர் என்று அறிதற்கு யாதொரு சான்றுமின்று. அவர் தம் நூலில்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்" எனவும்

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ் பூவை நிலையும்"

எனவும் ஈரிடத்து மாயோனை எடுத்துக் கூறுதலால் அதற்கேற்ப, அவர் காலத்திற்குப் பன்னெடுங்காலம் முன் இருந்தே முல்லைநில மக்கள் மாயோனைக் குல தெய்வமாக வழிபட்டு வந்தனர் என்பது மட்டும் உறுதியாகும்.

தொல்காப்பியர் நானிலங்கட்கும் உரிய தெய்வங்களைக் கூறவேண்டிய முறையில் மாயோன், முருகன், இந்திரன், வருணன் என்ற தெய்வங்களைக் கூறினரெனினும் இத்தெய்வங்களை, வேறுபாடு சிறிதும் கருதாது நிலங்கட்கு உரிமை கூறுமளவில் கூறியுள்ளனரா, ஏதேனும் வேறுபாடு கருதிக் கூறினராஎன்று ஆராயின், வேறுபாடு கருதியே கூறினர் என்பது புலனாகும். அகத்திணைக்குக் களவொழுக்கம் சிறப்புடையது; களவொழுக்கத்திற்குரியது குறிஞ்சி; குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகன்; ஆகவே முருகனை முன்னர்க்கூறுதல் முறையாகும்; அங்ஙனங் கூறாமல்,

“ மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்”

என மாயோனை முன்னர் கூறியுள்ளனர். இங்ஙனங் கூறியதற்கு ஏதேனும் காரணமிருத்தல் வேண்டும். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று நிலங்களைக் காரணம் பற்றி முறைவைத்து, அம்முறைக்கேற்ப அவ்வந் நிலத்திற்குரிய தெய்வங்களையும் கூறினர் எனின், அவ்வாறு காரணங் கூறுதற்கியைபின்மையானும், ஈண்டுக் காரணங் கூறின், நிலங்களைப் பிற இடங்களில் வேறு வேறு முறையாகக் கூறியுள்ளனராதலின், அவ்வவ் விடங்களினும் முறைவைப்புக்குக்காரணங் கூறுதல் வேண்டுமாதலானும் நிலங்களைக்காரணம்பற்றி முறைவைத்து அவற்றிற்குரிய தெய்வங்களைக் கூறினர் எனல் பொருந்தாது. அன்றியும் அச்சூத்திர இறுதியில் சொல்லிய முறையால் சொல்லவும்படுமே என்றதனால், இம் முறையன்றிப் பிறமுறையாற் சொல்லவும்படும் என்பது கிடைக்

கிறது. நிலங்களைக் காரணம் கொண்டு முறைவைத்திருப்பின் அங்ஙனங் கூறார். (இனி, மாயோன் நில உரிமையில் முல்லை நில மக்களுக்குரிய வழிபடுதெய்வமாக இருப்பினும், தொல்காப்பியர்காலத்தில் மாயோன் வழிபாடு நானிலத்தினும் பெருகி இருந்ததாக, அச்சிறப்புக் கருதி அப்பெருமானை முன்னர்க்கூறினராதல் வேண்டும்;) அல்லது, அவர் மாயோனை வழிபடுதெய்வமாகக் கொண்டவராய், அது கருதி முன்னர்க் கூறினராதல் வேண்டும். அன்றி, இவ்விரு காரணங்களானும் மாயோனை முன்னர்க் கூறின ரெனினும் பொருந்தும். இம்மூவகையன்றி வேறு காரணம் கூறுதற்கின்று.

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ் பூவை நிலையும்"

என்ற (புறத் 5) பகுதியில் அவர் மாயோனைக் கூறியிருக்கும் முறையை நோக்குமிடத்து, அப்பெருமானே இறைவன், முழுமுதற்பொருள் என்பது தொல்காப்பியர் கருத்தாதல் நன்கு தெளிவாகும். இப்பகுதி பூவை நிலை என்னுந் துறை கூறுவது.

நச்சினார்க்கினியர், மாயோன் விழுப்புகழ்=மாயவனுடைய காத்தற்புகழையும், மேயபெருஞ் சிறப்பிற்றுவா விழுப்புகழ்=எல்லோர்க்கும உரியவாய் மேவிய பெரிய தலைமையிற் கெடாத படைத்தல் அழித்தல் என்னும் புகழ்களையும், மன் பூவை நிலையும்=மன்னர் தொழிலுக்கு உவமையாகக் கூறும் பூவை நிலையும்என்றும் "பெருஞ் சிறப்பு" என்றதனால் "படைத்தலும், காத்தலும், அழித்தலுமன்றி அவரவர் தாமாகக் கூறலும், முருகன், இந்திரன் முதலியோராகக் கூறலுங்கொள்க" என்றும் கூறினர். இங்ஙனம் நச்சினார்க்

கினியர் கொண்டுகூட்டி இடர்ப்படுவதற்குக்காரணம், புறநானூற்றுப் பாடல்களில் அரசர்களுக்குப் பலதெய்வங்களும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன; அவற்றுள் அரி அயன் அரன் என்ற மூன்று கடவுளையாயினும் இச்சூத்திரத்து அமைத்துக் கூறவேண்டுமெனக்கொண்ட எண்ணமேயாகும். இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், மாயோன்... நிலையும் = மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடையகெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதலும் என உரை கூறி, இஃது உரையன்றென்பார் "மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவை நிலை யென்பர்" என்று வேறு கருத்தும் கூறினர். முதலிற் கூறிய உரையையே பின்வந்த வெண்பாமாலை நூலும் உரையும் கூறும்.

நச்சினார்க்கினியர் கூறுவதுபோல் அரசர்களுக்குத் தெய்வங்களை உவமை கூறுவதற்கே பூவை நிலை எனப் பெயர் வரக் காரணமில்லை. முல்லை நிலத்தவர் மாயோன் நிறத்தை ஒத்திருப்பது கருதிப் பூவைப் பூவைப் (பூவை = காயா) புகழ்ந்து கூறிய வழக்கமே முதலிற்றோன்றிய தாதல் வேண்டும். அதன் பின்னர் அப்பெருமானை உவமையாகக் கூறுவதும் பூவைநிலை எனப் பெயர்பெற்று அவ்வழியாகப் பிற தெய்வங்களை உவமையாகக் கூறுவதும் பூவை நிலை என்று வழங்கத் தலைப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறன்றித் தொடக்கத்திலேயே அரசர்களுக்குத் தெய்வங்களை உவமைகூறுவது பூவை நிலையெனப்பெயர் பெற்றது எனக் கோடல் பொருந்தாது ஆதலால், உரையாசிரியர் உரையும் வெண்பாமாலைக் கருத்தும் பொருத்தமானவைகளாம். முல்லைக்கலி 6-ம்பாடலில் "சுரும்பிமிர் கானம் பாடினம் பரவுதும்" எனக் கூறப்

பட்டது. இதற்கு நச்சினார்க்கினியர் சுரும்பினம் ஒலிக்கின்ற கானத்தை நாம் பாடினமாய்த் திருமாலைப் பரவுவேம் என்றார். இவ்வுரைக்கு, காட்டையும் திருமாலையும் துதித்தல் கருத்தாகவும் கொள்ளலாம்; காட்டைப்பாடி அதன் வாயிலா கத் திருமாலைத் துதிப்போம் எனவும் கொள்ளலாம். எப்படி யும் காட்டைப்பாடும் வழக்கமுண்மை கூறப்பட்டது. இக் குறிப்பு மேற்கூறப்பட்ட கருத்தை வலியுறுத்தும்.

பூவைநிலை கூறுமிடத்து "மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்" என்று பல அடை மொழிகளாற் சிறப்பித்ததன் கருத்தை நோக்குவாம். இச்சூத்திரத்தை மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ் மாயோன் மேய பூவை நிலையும் எனக்கூட்டிப்பொருள் கொள்ளுதல்பொருத்த மாகும். அங்ஙனங் கொள்ளாவிட்டால் மன்பெருஞ் சிறப் பிற் றாவாவிழுப்புகழ் என்ற அடைமொழிகளைப் பூவைநிலை என்ற துறைப்பெயரோடு இயைப்பது பொருட்சிறப்பின்றாய் முடியும்.

மன்பெருஞ் சிறப்பினையும் தாவா விழுப் புகழினையும் உடைய மாயோன் என்றபடி. மன்பெருஞ் சிறப்பு = அழி யாத பேரின்பத்தினுடைய வீட்டுலகம். வீடு = அழிவில தாய் அளவிறந்த இன்பத்தினையுடையதாதலின் அதனை மன் பெருஞ் சிறப்பு என்றார். வீட்டினை அந்தமில் இன்பத் தழி வில் வீடு என்று பரிமேலழகரும்; அந்தமில் பேரின்பம், நல மந்தமில்லதோர் நாடு என்று நம்மாழ்வாரும் கூறுதல் காண்க. தாவா விழுப்புகழ் = அழிவில்லாத சீரிய புகழ். அப்பெரு மான் புகழ் பொருள்சேர் புகழாதலின் அதனைத் தாவா விழுப்புகழ் என்றார். இங்ஙனம் மாயோன் அந்தமில் பேரின் பத்து அழிவில் வீட்டினையும் பொருள் சேர் புகழையும்

உடைய முழு முதற்பொருள் என்னும் தம் கருத்தினை உணர்த்தவே ஈண்டு "மன் பெருஞ் சிறப்பிற் றுவா விழுப் புகழ் மாயோன்" எனக் கூறினர் எனக் கொள்க. இங்ஙனமே தெய்வப் புலமைத் திருவள்ளுவர், மடியிலா மன்னவன் உலக முழுவதும் எய்துவன் எனக் கூறவேண்டுமிடத்து, உலக முழுதும் என்பதற்கு "அடியளந்தான் தாய தெல்லாம்" என வேறு முறையாகக் கூறி, அதனால் தம் உட்கோளைப் புலப்படுத்தி யிருத்தல் காண்க.

இக்காலத்துச் சிலர் "மாயோன் மேய காடுறையுலக மும்" என்ற தொல்காப்பியர் கொள்கைக்கு மாறாக, முல்லை நிலத்துக்குக் காடுகிழாள் (துர்க்கை) தெய்வமென்றும், திரு மால் நெய்தல் நிலத்துக்குத் தெய்வமென்றும் கூறித் தொல் காப்பியச் சூத்திரத்தையும் "மாயோள் மேய காடுறையுலக மும்" என்று திருத்துவாராயினர். சங்க நூல்களில் காடு கிழாள் முல்லை நிலத் தெய்வமாக யாண்டுங் கூறப்படவில்லை; திருமால் நெய்தல் நிலத் தெய்வமாகவும் கூறப்படவில்லை. கலித்தொகையில் முல்லைக் கலியையும் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையையும் படித்தால், நிலப் பாகுபாட்டு முறையில் திருமால் முல்லை நிலத் தெய்வம் என்ற தொல் காப்பியர் கொள்கையே பொருத்தமாகும் என்பது நன்கு தெளிவாகும். அன்றியும் பிற்கால நூலாசிரியர்களும் உரை யாசிரியர்களும் பாலை நிலத்துக்குக் காடுகிழாள் தெய்வம் என்று கொண்டனர். சிலப்பதிகார ஆசிரியரும் இக் கருத் துடையவரே என்பது வேட்டுவ வரியில் காடுகிழாள் பாலை நிலத் தெய்வமாக அவர் கூறி யிருப்பதனால் நன்கு விளங்கும். ஆகவே காடுகிழாள் முல்லை நிலத் தெய்வம் என்பதும் திரு மால் நெய்தல் நிலத் தெய்வம் என்பதும் பொருத்தமற்ற

கருத்துக்கள் என்பது வெளிப்படை. திருமாலைப் பற்றி இவ்வாறு கூறியிருத்தலையன்றித் திருமாலை வழிபடுவோரைப் பற்றியும் கூறியுள்ளனர்.

“ நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய ”

என்பது மரபியற் சூத்திரம். இதற்கு இளம்பூரணர் நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங்காலத்து அந்தணர்க் குரிய என்றனர். பேராசிரியர் இச்சூத்திரத்திற் கிவ்வாறே பொருள் கூறி, விசேட உரையில் பொருத்தமற்ற வேறு சில கருத்துக்களைக் கூறுவாராயினர். அதற்குக் காரணம் பேராசிரியர் சுமார்த்தப் பிராமணர்; சுமார்த்தப் பிராமணர்களுள் சந்நியாசிகள் ஒரு கோல் தரிப்பர்; அவ்வழக்கம் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் உண்டு எனக் கூறுதல் வேண்டும் என்றெழுந்த எண்ணமேயாகும். அது நிற்க, சூத்திரத்தில் அந்தணர்க்கு முக்கோல் கூறப்பட்டது. அவ்வந்தணராவார் முற்றத்துறந்த முனிவர்களே என்பது பிற நூல்களால் அறியக் கிடக்கின்றது. கலித்தொகை பாலைக் கலியில்,

எரித்தரு கதிர் தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கோளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீர்

என்ற பகுதியில் அந்தணர் கரகமும் முக்கோலும் உடையராய் சிஷ்யர்களோடு யாத்திரையாய்ச் சென்றுகொண்டிருப்பவர்கள் என்றும் அவர்கள் இறைவன் திருவடியன்றி வேறு

இன்பங்களைக் கருதாதவர் என்றும் கூறப்பட்டிருக்கின்றனர். அவருடைய முக்கோல் உரைசான்ற முக்கோல் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. உலகத்தாரால் புகழ்ந்து கூறப்பட்ட முக்கோல் என்றபடி. தொல்காப்பியர் போன்ற பெரியோரால் எடுத்துக் கூறப்பட்ட முக்கோல் எனினுமாம். இங்குக் கூறப்பட்டுள்ள முறையை நோக்கின் இவர்கள் துறவிகள் என்பது தெளிவாகும். மற்றும் நெய்தற் கலியில்,

சேக்கர் கோள் பொழுதினுன் ஒலிநீவி யினநாரை
முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்
எக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப

என்ற பகுதியில் முக்கோல் அந்தணர் இறைவனைக் கூறும் திருமந்திரத்தை நினைந்திருத்தல் கூறப்பட்டது.

இதனுரையில், அந்தணர் = காஷாயம் போர்த்த குழாங்கள், முதுமொழி = பிரணவம் எனக் கூறினர் நச்சினார்க்கினியர். முல்லைப் பாட்டிலே, பாசறையில் வீரர்கள் வில்லை நட்டு அதிலே தூணிகளைத் தொங்கவிட்டுள்ளதற்குக் "கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோலசை நிலை கடுப்ப" என உவமை கூறினர். ஈண்டு நூலாசிரியரே முக்கோலுடையார் காஷாயம் உடுத்த முனிவர் என்று கூறியுள்ளார். இவற்றால் தொல்காப்பியர் கூறிய முக்கோலந்தணர் துறவிகள் என்பதும், அவர் ஐம்பொறியடக்க முடையவராய், இறைவன் திருவடியன்றி வேறு பற்றில்லாதவராய் எப்போதும் இறைவனைப் பற்றிய மந்திரத்தைச் சிந்திப்பவராய் இருப்பார் என்பதும், அவர்கள் பெரும்பாலும் சிஷ்யர்களோடு யாத்திரை செய்துகொண்டிருப்பார் என்பதும் பெறப்பட்டன. தொன்றுதொட்டு இன்றளவும் முக்

கோலுடையார் வைணவ சமய சந்நியாசிகளாக இருத்தல் யாவருமறிவர். எனவே ஈண்டுக்கூறப்பட்டவர்கள் திருமாலடியார்களாகிய முக்கோல் முனிவர் எனக் கொள்க.

இவர்கள் முக்கோல் ஏந்துதற் கருத்து யாதெனின், பேராசிரியர் தொல்காப்பிய உரையில் ஒன்றுங் கூறிற்றிலர். கலித்தொகையில் "உரைசான்ற முக்கோலும்" என வந்துள்ள இடத்தில் அரி, அயன், அரன் என்னும் மூவரையும் வேறென்று கூறாது ஒருவரென்று கூறுதலமைந்த முக்கோலும் எனப்பொருள் கூறினர். இங்ஙனம் கொண்ட கொள்கையினையுடைய ஒரு கூட்டத்தார் இருந்தனர் என்று அறியப்படவில்லை. முக்கோல் தரித்தல் தாம்கொண்ட தத்துவக் கொள்கையினை வெளியிடுவதற்குரியதாகக் கோடலே பொருத்தமாகும். இஞ்ஞான்றும் அவ்வாறே கொள்ளப்பட்டு வருகின்றது. முக்கோல் முனிவர் உயிர் (சித்து) உயிரல் பொருள்களின் பரப்புக்கு மூல காரணமாக உள்ள மூலப் பகுதி (அசித்து), இறைவன் (ஈசுவரன்) எனத் தத்துவம் மூன்று என்னும் தம் கருத்தினை உணர்த்தற்கு முக்கோல் ஏந்தினர் எனக் கொள்க. அவ்வாறே ஒருகோலுடையார் பரம் பொருள் ஒன்று தவிர வேறுபொருளில்லை என்னும் தம் கருத்துத் தோன்ற ஒரு கோல் கொண்டிருத்தல் காண்க. சித்து, அசித்து, ஈசுவரன் எனத் தத்துவம் மூன்றென்பது வைணவ சமயக் கொள்கை.

"சித்தசித்தோ டீசனேன்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்"

என்பர் நம்மாழ்வாரை. (வில்லி பாரதம்)

இங்ஙனம் முக்கோலுடையாரின் தத்துவக் கொள்கையோடு பொருந்த,

"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" என்னும் சூத்திரமும் பொருள் தந்து விளங்குதல் உய்த்து உணரற்பாலது. அச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறியாங்குக் கல்வியிற் பிரிவு மூன்று யாண்டைக் கடவாது என்பது ஒருரை. இனி நச்சினார்க்கினியர், வேண்டிய கல்வி யாண்டிறவாது மூன்றிறவாது எனப் பிரித்து, கல்வியிற் பிரிதல் ஒரு வருடத்தைக் கடவாதென்றும் அவ்வொரு வருடத்திற் கற்குங் கல்வி மூன்று பதங்களைக் கடவாது என்றும், மூன்று பதமாவன:— அது நீ ஆனுய் (தத்துவமசி வாக்கியம்) என்பன என்றும் கூறினர்.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய"

என்ற சூத்திரத்தில் அந்தணர் முக்கோல் கோடல், அவர்தம் தத்துவக் கொள்கையை வெளியிடுங் குறிப்பினது எனக் கோடல் பொருத்தமென மேலே காட்டினோம். அஃதற்கு ஏற்ப, வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" என்ற சூத்திரத்தில் மூன்றிறவாது என்பதற்கு வேண்டிய கல்வி உயிர், உயிரல் பொருள்கட்குக் காரணமாய மூலப்பகுதி, இறைவன் என்னும் தத்துவம் மூன்றினையும் கடவாது எனப் பொருள் கோடலே பொருத்தமாகும்.

சித்தசித்தீசன் எனத் தத்துவம் மூன்றெனக் கொண்ட முக்கோல் முனிவர்கள் தத்தம் சிஷ்யர்களோடு யாத்திரையாகச் சென்று கொண்டிருப்பர் என்பது, மேற்

காட்டப்பட்ட "எறித்தரு கதிர் தாங்கி" என்னும் கலித்தொகைச் செய்யுளால் அறியப்பட்டது. அங்ஙனம் அவர்கள் யாத்திரையாகச் செல்வது ஆங்காங்குள்ள திருமால் திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுதற்காதல் வேண்டும் என்பது உய்த்துணரப்படும்.

சிலப்பதிகாரம், கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் மதுரை செல்லக் கருதி, உறையூரை யடுத்த ஓர் பொழிலில் தங்கியிருந்தபோது, குடமலைப் பக்கத்து மாங்காடு என்னும் ஊரிலிருந்து ஆண்டுவந்த அந்தணனொருவன் அவர்களுக்கு மதுரைக்குச் செல்லுதற்குரிய வழிகளை விளக்கமாகக் கூறினன் எனக் கூறுகின்றது. அவ்வந்தணன், "திருமால் திருவரங்கத்தில் பாம்பணையின்மேல் பள்ளிகொண்டிருக்கும் காட்சியையும், திருவேங்கடத்து நின்ற திருக்கோலமாக எழுந்தருளியுள்ள காட்சியையும் காண விரும்பியான் செல்கின்றேன்" எனக்கூறியுள்ளனன். இதனால், இத்தகைய கடவுள் வணக்கங் கருதிய யாத்திரை அக்காலத்து உண்டென்றும், கலித் தொகையிற் கூறப்பட்ட முக்கோன் முனிவர் யாத்திரையும் இம்முறையினதே என்றும் அறியலாகும்.

இவர்கள் யாத்திரைக் கேற்றவாறு திருமால் திருக்கோயில்கள் ஆங்காங்கு அமைந்து விளங்கின எனத் தொல்காப்பியத்தாற் குறிப்பாகவும், சங்க நூல்களாலும், சிலப்பதிகாரத்தினாலும் வெளிப்படையாகவும் அறிகின்றோம். முல்லை நிலத்தவர்க்கு மாயோன் வழிபடு தெய்வம் என்று தொல்காப்பியம் கூறுதலின், முல்லை நிலங்களில் ஆங்காங்கு திருமால் திருக்கோயில்கள் இருந்தன வென்பது உய்த்துணரப்படும். அன்றியும்,

> "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
> முல்லை முதலாச் சொல்லிய முறையின்
> பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
> இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

என்ற சூத்திரத்தில் இளம் பூரணர், "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் பிரிவே" எனக் கூட்டி "முல்லை முதலிய நிலங்களில் உள்ள தெய்வங்கட்கு நடைபெறுதற்குரிய பூசனையும் விழாவும் நன்கு நடைபெறுமாறு செய்தற்குத் தலைவன் தன்மனைவியை விட்டுப் பிரிந்து செல்தலுல் உண்டு எனப் பொருள் கூறினர். இதனாலும் முல்லை நிலங்களில் ஆங்காங்குத் திருமால் திருக்கோயில்கள் இருந்தன என்பது பெறப்படும். சங்கநூல்களாலும் சிலப்பதிகாரத்தாலும் திருவேங்கடம், காஞ்சீபுரம், காவிரிப்பூம்பட்டினம், திருவரங்கம், திருமாலிருஞ்சோலை மலை (அழகர் மலை), மதுரை, திருவனந்தபுரம் ஆகிய இவ்விடங்களில் திருமால் திருக்கோயில்கள் உண்மை அறியப்படுகின்றது. இவ்விடங்களில் இன்றளவும் திருமால் திருக்கோயில்கள் உண்மை கண் கூடு. சந்தர்ப்பத்திற் கியைய நூல்களால் எடுத்துக் கூறப்பட்டவை இவை எனவே நூல்களால் எடுத்துக் கூறப்படாமல் ஆங்காங்கு திருமால் திருக்கோயில்கள் பல இருந்திருத்தல் கூடும் எனக் கொள்க.

தொல்காப்பியர் கூறியபடி நிலப்பிரிவிற் கேற்பத் திருமால் முல்லை நிலத்தார்க்குக் குலதெய்வமாக இருப்பினும் மேற்காட்டப்பட்ட திருமால் திருக்கோயில்கள் நான்கு நிலத்து மமைந்து இருத்தலால் நான்கு நிலமாக அமைந்த தமிழ் நாடு முழுவதும் திருமால் வழிபாடு பெருகி இருந்தமை பெறப்படும்.

மேற்கூறப்பட்ட "எறித்தரு கதிர் தாங்கி" என்று தொடங்கும் கலித்தொகைச் செய்யுள் தலைவி தலைவனுடன் வேற்றூர்க்குப் போய்விட, அவளைத் தேடிச்சென்ற செவிலி, வழியிடை முக்கோல் முனிவரைக் கண்டு, தன்மகளையும் அவளுடன் செல்லும் தலைமகனையும் கண்டீரோ என வினவுதலும், அதற்கு அவர் கூறிய மறுமொழியுமாக அமைந்த செய்யுளாகும். அச்செய்யுளின்கண் முக்கோல் முனிவர் செவிலிக்குச் சிறந்த அறவுரைகளைக் கூறி, உடன்போக்கு மேற்கொண்ட தலைவன் தலைவியரைத்தேடிப் பின்செல்லாது திரும்பிச் செல்லுமாறு கூறுதல் காணப்படுகின்றது. இதனால் அக்காலத்து முக்கோல் முனிவர் ஆங்காங்கு தம்மையடைந்தார்க்குத் தக்க அறவுரைகளைக் கூறுதல் இயல்பு என்பதும் அவர் வாய்மொழி பிரமாணமாகக் கொள்ளத்தக்கதாக இருந்ததென்பதும் பெறப்படும்.

செவிலி முக்கோற் பகவரை வினவுதலையும், அவர் அறவுரை கூறுதலையும் தஞ்சைவாணன் கோவை முதலிய பிற்காலக் கோவைகளெல்லாம், ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல், மிக்கோ ரேதுக்காட்டல் என இரு துறைகளாகக் கொண்டு கூறுவனவாயின. மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையாரின்கண், இவ்விரு துறைகளையும் இங்ஙனங் கூறிற்றிலர்; விரதியரை வினவல், வேதியரை வினவல் என வேறு முறையாக இருதுறை கூறினர்; இவர்கள் செவிலிக்குக் கூறும் மறுமொழிகளும் கூறிற்றிலர்; முக்கோற்பகவர் கூற்றாகவரும் அறவுரையை, வழிவருவோர் பிறர் கூற்றாக "உலகியல் புரைத்தல்" என்ற பெயரோடு அமைத்துள்ளனர். முக்கோன் முனிவர் வைணவ சமயத்தினராக இருந்தமை கருதியே மாணிக்கவாசகர் தம் நூலகத்து அவர்களைக்

கூறுது வேறு முறையிற்றுறை யமைத்துக் கூறுவாராயினர். சங்கநூற் கருத்துக்களைப் பெரும்பாலும் தழுவிச் சொல்லும் இவர், கலித்தொகையிற்கண்ட முறையை விடுத்து வேறு முறை கோடற்கு காரணம் வேறு இன்றெனக் கொள்க. ஆயினும், பிற்காலக் கோவைகளெல்லாம் முக்கோற் பகவரை வினுதல், மிக்கோரேதுக்காட்டல் எனப் பண்டைய முறையே மேற்கொள்வனவாயின.

இனிச் சங்க இலக்கியங்களில் திருமால் வழிபாடு முதலிய குறிப்புக்களைப் பற்றி நோக்குவாம். கலித்தொகை யில் முல்லைக்கலியிலும் பிற பகுதிகளிலும் திருமாலைப்பற்றிய பல குறிப்புக்கள் வந்துள்ளன. 7-ம்பாடலில் "திண்ணிதாத், தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னைப், பொய்யில் பொதுவற்கடை சூழ்ந்தார் தந்தையோடு, ஐயன்மாரெல்லா மொருங்கு" என்று கூறப்பட்டது. ஆயர்கள் வழக்கப்படி ஒரு தலைவன் ஏறுதழுவும்போது அவன் தலையில் அணிந் திருந்த முல்லைமாலை காளையின் கொம்பிலகப்பட்டு, அக்காளை துள்ளியதனுல் அம்மாலை ஆண்டுநின்ற தலைவியின் கூந்தலில் வந்து வீழ்ந்தது; அதுகண்ட ஆயர் திருமாலே அவனை அவட்குக் கணவனுகுமாறு காட்டியதாகக் கருதி மணமுடிக் கக் கருதினர் என்று தோழி தலைவிக்குக் கூறினள். முல்லை நிலத்தார்க்குத் திருமால் குலதெய்வமாதலின் "திருமால் காட்டிற்று" எனக் கருதுவாராயினர்.

இங்ஙனமாய ஏறுதழுவும் நிகழ்ச்சிகளிறுதியில் அரசனை வாழ்த்துமிடத்து, அரசன் வாழ்வானுக எனத் திரு மாலைத் துதித்தல் அவரியல்பு.

"சுரும்பிமிர் கானம் பாடினம் பரவுது
மேற்றவர் புலங்கெடத் திறை கொண்டு
மாற்றாரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே"
(6-ம் பாட்டு)

"பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொள் நேமியாற் பரவுதும் நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி
யமைவர லருவி யார்க்கு
மிமையத்தும்பரும் விளங்குக வெனவே"
(5-ம் பாட்டு)

"தொல் கதிர்த்திகிரியாற் பரவுது மொல்கா
வுருமுறழ் முரசிற் றென்னவற்
கொருமொழி கொள்கவிவ் வுலகுட னெனவே"
(4-ம் பாட்டு)

"தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர் பரந்த தொன்னில
மாளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே"
(3-ம் பாட்டு)

என்பன காண்க. "தேயா விழுப்புகழ்த் தெய்வம்" என்றது திருமாலை. அப்பெருமான் புகழை ஈண்டுத் தேயா விழுப்புகழ் என்றது, தொல்காப்பியர் "தாவா விழுப் புகழ்" என்றதனோடு ஒத்து விளங்குதல் காண்க.

மேற்காட்டப்பட்ட கலித்தொகைப் பகுதிகளால் திருமால் நிலப்பகுப்பில் முல்லை நிலத்தார்க்குக் குலதெய்வ மாதலும், பாற்கடலிற் பாம்பணையிற் பள்ளிகொண்டிருத்

தலும், சக்கரப்படை ஏந்தியிருத்தலும், தேயா விழுப்புக ழுடைமையும் பேறப்படுகின்றன. அப்பெருமானுடைய சக்கரப்படை கொலைத்தொழிற் குரியதாயினும், அறத்தின் வழிப்பட்டு யாவர்க்கும் நன்மை புரிவதாதலின் அஃது "ஆடுகொள் நேமி" என்றும், "தொல்கதிர்த் திகிரி" என்றும் "பொரு முரண் மேம்பட்ட பொலம்புனை புகழ் நேமித் திருமறுமார்பன்" (4-ம் பாட்டு) என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டது. நம்மாழ்வார் அருளார்திருச்சக்கரம்" என்றும், "அறமுயலாழிப்படை" என்றும் கூறியிருத்தல் காண்க.

"திருமறு மார்பன்" என்பதற்கு நச்சினார்க்கினியர் திருவாகிய மறுவையுடைய மார்பன் என உரை கூறினர். திருவையும் மறுவையும் உடைய மார்பையுடையவன் என்பது பொருத்தம்.

"வள்ளுருண் நேமியான் வாய் வைத்தவளையே போல" (5-ம் பாட்டு) என்றதனால் அப்பெருமானுக்குச் சக்கரப் படைபோலச் சிறந்து விளங்கும் சங்கும் கூறப்பட்டது.

"மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்த ஞான்று"

(3-ம் பாட்டு) என்ற பகுதியில் கண்ணன, கஞ்சனால் அனுப்பப்பட்டுக் குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனைக் கொன்ற வரலாறும்,

"மல்லரை மறஞ் சாய்த்த மால்போல்" (குறிஞ்சி 16)

"மல்லரை மறஞ் சாய்த்த மலர்த்தண்டா
ரகலத்தோன்

ஒல்லாதா ருடன்றேட உருத்துட னேறிதலின்
கோல்யானை அணிநுதலழித்திய ஆழிபோல்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்"

(நெய்தல் — 17) என்ற பகுதிகளில், அவன் மல்லரைக் கொன்ற வரலாறும் கூறப்பட்டுள்ளன. ஈண்டுக் கூறப்பட்ட மல்லர், கஞ்சன் கண்ணனை வில்விழாக் காணுமாறு அழைத்து அப்போது விளையாட்டாகப் போர்செய்து அப்பெருமானைக் கொல்லுமாறு அமைத்திருந்த சாணூரன், முஷ்டிகன் என்பவர்களாம். அன்றித் துரியோதனன்பால் பாண்டவர்க்காகத் தூது சென்றபோது, துரியோதனன் கண்ணனை வஞ்சகமாகக் கொல்வதற்குப் பொய்க்குழி படுத்தி, அதனுள் மல்லரை அமைத்து, மேலே பொய்யாசனம் அமைத்துக் கண்ணனை அதன்கண் இருக்கச்செய்தனன்; கண்ணன் அம்மல்லரை யழித்தனன்; அம்மல்லர்களுமாம்.

மேற்கூறப்பட்ட நெய்தற்கலிப் பாட்டில் கண்ணன் பகைவர் யானையின் நெற்றியில் சக்கரப்படையை யெறிந்து கொன்ற செய்தியொன்று கூறப்பட்டுள்ளது. இஃது எச்சமயத்தில் நிகழ்ந்தது என்பது அறியப்படவில்லை. இங்ஙனமே மற்றும் இருசெய்திகள் உள்ளன. பான்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும் நீனிறவண்ணனும் போன்ம்" (முல்லை — 4) என்ற பகுதியிற் கூறப்பட்டதாகிய திங்களைப் பாம்பினின்றும் விடுவித்த செய்தியும் எச்சமயத்தில் நிகழ்ந்ததென்பது அறியப்படவில்லை. இச்செயல்,

"பண்டோராலிலைப் பள்ளிகோண்டவன் பான் மதிக்கிடர்
[தீர்த்தவன்" 1—8—6,

"பனிசேர் விசும்பில் பான்மதிக் கோள் விடுத்தானிடம்" 6-4-9 எனத் திருமங்கை மன்னனாலும் கூறப்பட்டுள்ளது.

புறநானூற்றில்,

"அணங்குடை யவுணர் கணங் கொண் டொளித் [தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறுகாணு
திருள்கண் கெடுத்த பருதிஞாலத்
திடும்பை கோள் பருவரல் தீரக் கடுந்திறல்
அஞ்சன வுருவன் தந்து நிறுத்தாங்கு" (புறம்–174)

என மற்றொரு செய்திகாணப்படுகின்றது. தேவர்க்கும் அசுரர்க்கும் போர் நிகழ்ந்தபோது இரவிற்போலப் பகலிலும் தாங்கள் போர் செய்தற்பொருட்டு அசுரர் சூரியனை ஒளித்து விட்டார்கள்; அதனால் உலகம் அடைந்த துன்பத்தைப் போக்கத் திருமால் அச்சூரியனைக் கொண்டுவந்தளித்த தொரு கதை என்று அதன் உரையாசிரியர் கூறுகின்றார். இச்செய்தியும் முற்றும் அறியப்படவில்லை. குறிஞ்சிக்கலி 8 ஆம்பாடலில்

"கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிர்எதி ரோங்கிய மால்வரை யடுக்கத்
ததிரிசை யருவிதன் அஞ்சினை மிசைவீழ
முதிரிண ரூழ்கொண்ட முழவுத்தோ ளெரிவேங்கை
வரிநுதல் எழில் வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல் வெற்ப"

என்று கூறப்பட்டது. ஒரு மாணிக்கப் பாறையில் உள்ள வேங்கைமரம் அழகாகப் பூத்துநின்றது. அதன் இரு புறத்தும் இரண்டு மலைக்குன்றுள்ளன. அவற்றிலிருந்து அருவிகள் வேங்கை மரத்தின்மேல் வீழ்ந்து அதன் பூவோடு கீழே வீழ்வது, தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியின் இருபக்கத்திலும் இரு யானைகள் நின்று பூநீர் சொரிவதை ஒத்துளது என்பது கருத்து. இதனால், திருமால்கோயில் களில் கஜலக்குமிவடிவம் வைத்து வழிபடும் வழக்கம் தமிழ் நாட்டில் மிகத்தொன்று தொட்டதொன்று என்பது புலனு கும். நடுவே இலக்குமியும் இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப் பூவும் இரண்டு யானையுமாக அமைக்கும் விக் கிரக வடிவமும் உண்டு என்பதும் அத்தகைய வடிவம் வீடு களுக்குச் செய்யும் சித்திர வேலைப்பாடுகளிலும் அமைக்கப் பட்டிருந்தது என்பதும் பத்துப் பாட்டிலுள்ள நெடுநல் வாடையாலறிகின்றோம்.

கலித்தொகையில் பாரத நிகழ்ச்சிகள் பல உவமை யாக எடுத்தாளப்பட்டுள்ளன.

“ அஞ்சீரசையியல் கூந்தற் கைநீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் ”

(முல்லைக்கலி 1 பாட்டு) என்ற பகுதியில், வீமசேனன், திரௌபதியின் கூந்தலைத் தொட்டிழுத்த துச்சாசனனைப் போரிற் பகைவர் நடுவே நெஞ்சைப் பிளந்து கொன்று தன் சபதம் முடித்த செயலும்

"ஆரிருளென்ஞன் அருங்கங்குல் வந்துதன்
தாளிற் கடந்தட்டுத் தந்தையைக் கோன்ருனைத்
தோளிற் றிருகுவான் போன்ம்"

(முல்லைக் கலி–1 பாட்டு) என்ற பகுதியில், அசுவத்தாமன் இருளென்று கருதாமல் இரவிற்சென்று தன் தந்தையைக் கொன்ற திட்டத்துய்மனைத் தன் முயற்சியால் கொன்று அவன் தலையைத் திருகிய செயலும்,

"புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவரட்ட
பொருகளம் போலும் தொழூஉ" (முல்லைக்கலி–4)

என்ற பகுதியில் பாரதப்போர் நடைபெற்ற போர்க்களமும், குறிஞ்சிக்கலி 16-ம் பாடலில்

"மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான் போல்"

என்ற பகுதியில் வீமசேனன் துரியோதனனைக் கொன்ற செய்தியும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சிக்கலி இரண்டாம்பாடலில்

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தனனுக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லாதுழப்பவன் போல"

என்ற பகுதியில் இராவணன், சிவபெருமான் உமையுடன் வீற்றிருக்கும் கைலைமலையை எடுக்கத்தொடங்கி, எடுக்க

வியலாது துன்புற்ற செயல் கூறப்பட்டுள்ளது. இவற்றால் திருமாலின் அவதாரச் செயல்களைக் கூறும் பாரத இராமாயணங்களின் பெருவழக்கு அறியப்படும்.

கலித்தொகையிலும் பிறநூல்களிலும் பலதேவரைப் பற்றிய பல குறிப்புக்கள் வந்துள்ளன. அவற்றைத் தொகுத்துப் பின்னர்க் கூறுவாம்.

புறநானூறு.

புறநானூறு 56-ம் பாடலில்

> " மண்ணுறு திருமணி புரையும் மேனி
> விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும் "

நன்கு தூய்மை செய்யப்பட்ட நீலமணி போலும் திருமேனியையும், வானுற வோங்கிய கருடக்கொடியையும், வென்றியை விரும்புதலும் உடைய திருமால் என்று கூறப்பட்டுள்ளது.

" நீல்நிற வுருவின் நேமியோன் " என்றும் கூறப்பட்டது (58) 57 வது பாடலில்,

> "வல்லாராயினும் வல்லுந ராயினும்
> புகழ்தலுற் றோர்க்கு மாயோனன்ன
> உரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற "

எனப் பாண்டியனுக்குத் திருமாலை உவமை கூறினர். கல்வி நிரம்பாதவராயினும் நிரம்பப் பெற்றவராயினும் புகழத் தொடங்கியவர்க்குத் திருமாலை ஒத்த பாண்டியனே என்பது இதன் கருத்து. மாயோனை ஒத்தலாவது பாண்டியன் வல்ல வர்க்கும், வல்லவரல்லார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடிக்க வொண்ணாத தன்மையையுடையனாதல்; அன்றி இரு திறத் தார்க்கும் ஒப்ப அருள்புரியும் தன்மையுமாம் என்று இரண்டு கருத்துக் கூறினர் அதன் உரையாசிரியர். இரண்டாவது கருத்து மிகப் பொருத்தமுடையது. தன்னைப் புகழ்வார் புகழும் ஆற்றலுக்கேற்ப அவர்கட்கு அருள்புரிந்து உதவி செய்தல் சிறப்பாகாது. தன்னையடைந்தவர்களுடைய உள் ளத்துள்ள அன்புநிலை, அவர்களுடைய வறுமை நிலை இவற்றை நோக்கி அருள் புரிந்து உதவி செய்தலே சிறப் பாகும்.

"எத்துணை யாயினும் ஈத்தல் நன்றெனெ
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின் றவன் கைவண்மையே
(புறம் 141)

என்று இந்நூலிற் பிறிதோரிடத்துக் கூறிய கருத்தும்

வல்லினும் வல்லா ராயினும் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல்யானை ஆஅய்" (அகம் 152)

என்ற அகநானூற்றுப் பாடற் கருத்தும் காண்க.

இனி முதற் கருத்தில், கல்வியில் வல்லவராற் புகழ் ந்து முடித்தல் இயலாதாயின், கல்வியில் வல்லவரல்லாதார் புகழ்ந்து முடித்தல் இயலாமை தானே பெறப்படுமாதலின்

அதனைக் கூறுதல் வேண்டா என ஓர் குறை தோன்றுகின்றது. அதனால் அக்கருத்தை வேறு வகையாக அமைத்துக் கொள்ளுதல் நன்றாகும். கல்வியில் வல்லரல்லரால் புகழ்ந்து முடிக்க இயலாமைபோல, கல்வியில் வல்லாராலும் புகழ்ந்து முடிக்க இயலாதவன் என்று உபமானமும் உபமேயமுமாக அமைத்துக் கொள்ளலாம்.

இவ்விரு கருத்துக்களேயன்றி வேறொரு கருத்தும் ஈண்டுக் கூறலாம். மாயோனிடத்து அளவிறந்த பக்தியுடையராய், அவனருளே துணையாகக்கொண்டு அவனியல்புகளை எடுத்துரைக்க லுற்ற ஆழ்வார் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தனர். தவத்தால் ஞானம் பெற்று, அந்த ஞானமே துணையாக அவனியல்புகளை எடுத்துரைக்கலுற்ற இருடிகள் அங்ஙனம் எடுத்துரைக்க இயலாதவராயினர் என ஆன்றோர் அறிவித்துள்ளனர்.

"கூறுத லொன் றாராக் குடக்கூத்த வம்மானைக்
கூறுதலே மேவிக் குருகூர்ச் சடகோபன் சொன்ன"

என்ற நம்மாழ்வார் பாசுரப்பகுதி காண்க. அங்ஙனமே கல்வி நிரம்பாதவராயினும் பாண்டியனிடத்து அன்புடையார் அவனருளால் அவனிடத்து நெருங்கிப் பழகி அவனியல்புகளை அறிந்து கூறும் இயல்பினராவர் என்றும், கல்வியில் நிரம்பிய வராயினும் பாண்டியனருள் பெறாதார் அவனை யணுக இயலாதவராதலின் அவனியல்புகளை யறிந்துரைக்கவும் இயலாதவராவர் என்றும் பொருத்தியுரைத்துக் கொள்ளலாம். இங்ஙனமாக,

"வல்லாராயினும் வல்லுந ராயினும்
புகழ்தலுற்றோர்க்கு மாயோ னன்ன"

என்ற பகுதி மாயோனுடைய பல சிறப்புக்களை விளக்கி நிற்றல் காண்க.

198-வது பாடலில்,

"ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்" என்ற பகுதியால் திருமால் ஆலிலையிற் பள்ளிகொண்டிருக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது.

358-வது பாடலில்,

"விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட்டோரே"

எனத் திருமகள் சிறப்புக் கூறப்பட்டது. உலகப் பற்றற்று இறைவன் திருவடிகளை யடைவார்க்குத் திருமகள் புருஷகாரமாக நின்று அருள் புரிதலும், அங்ஙனம் பற்றறுதார்க்கு அருள்புரியாமையும் கருத்தாகக் கொள்க.

இலம்பா டுழந்தவென் னிரும்பேரொக்கல்
விரற்செறி மரபின செவித் தொடக்குநருஞ்
செவிக்கமை மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக்குநரும்
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநரும்
கடுந்தெரிராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்டகுரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந்தாங்கு
அறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே புறம்—378

என்ற பகுதியில் இராமாயணக் கதைக் குறிப்பொன்று உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. சோழ அரசன் ஊன்

பொதி பசுங்குடையார் என்ற புலவருக்குப் பல ஆபரணங்கள் பரிசாக அளித்தனன். அப்புலவருடைய சுற்றத்தார் அவற்றையணிந்துகொள்ளும் முறையறியாமல் காதிலணிதற்குரியவற்றை விரலிலும், விரலில் அணிதற்குரியவற்றைக் காதிலும், இடையி லணிதற் குரியவற்றைக் கழுத்திலும், கழுத்திலணிதற்குரியவற்றை இடையிலுமாகத் தடுமாறியணிந்தனர். அது இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றபோது அவள் கழற்றிக் கீழேயெறிந்த ஆபரணங்களைச் சுக்ரீவனைச் சேர்ந்த குரங்குகள் எடுத்து முறையறியாமல் அணிந்ததை யொத்துப் பெருநகையை விளைவித்தது என்பது கருத்து. இக் கதை இவ்வாறு இராமாயணங்களிற் காணப்படவில்லை. சீதை கழற்றிக் கீழேபோட்ட ஆபரணங்களைச் சுக்ரீவன் எடுத்து வைத்திருந்து இராமபிரான் வந்தபோது அடையாளம் தெரிதற்காக அவரிடம் கொடுத்ததாக மட்டும் உள்ளது.

அகநானூறு.

இந்நூலில் திருமாலைப்பற்றி அவருடைய கிருஷ்ணாவதாரச் செய்தியொன்றும், இராமாவதாரச் செய்தியொன்றும், பரசுராமாவதாரச் செய்தி யொன்றுங் காணப்படுகின்றன.

> "..........வடாஅது
> வண்புனற் றொழுநை வார்மண லகன்றுறை
> அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
> மரஞ்சேல மிதித்த மாஅல் போல" (அகம் 59)

எனக் கிருஷ்ணாவதாரச் செய்தி கூறப்பட்டது.

"மரஞ்சேல மிதித்த மால்"—

ஆயர்மகளிர் குளியாநின்றூர்களாக, அவரிட்டு வைத்த துகி லெல்லாம் பின்னை எடுத்துக்கொண்டு குருந்த மரத்தேறினு ராக, அவ்வளவில் நம்பி மூத்தபிரான் வந்தாராக, அவர்க்கு ஒரு காலத்தேகூட மறைத்தற்கு மற்றொரு வழியின்மையின், ஏறிநின்ற குருந்த மரத்துக் கொம்பினைத் தாழ்த்துக் கொடுத் தார் அதற்குள்ளே அடங்கி மறைவாராக; அவர் போமளவும் தானையாக வுடுக்கத் தாழ்த்தாரென்பாருமுளர். என அதன் குறிப்புரை யாசிரியர் கூறினர். இச்செய்தி இவ்வாறே சீவகசிந்தாமணியில்,

நீனிற வண்ணன் அன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ணன் நோக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானைவேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையினூர்க்குக் குருந்தவ ஞேசித்த தென்றுன்.

எனக் கூறப்பட்டுள்ளது. கண்ணன் ஆயர்மகளிர் ஆடை கவர்ந்த செய்தி தமிழ் நாட்டில் அக்காலத்து இவ்வாறு வழங் கிற்றெனக் கோடல் வேண்டும். பாகவதத்தில் இச் செய்தி சிறிது வேறுபடக் காணப்படும்.

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராம னருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே" (அகம் 70)

இப்பகுதியில் இராமாவதாரச் செய்தி கூறப்பட்டது. இராம பிரான் வானர சேனைகளோடு தென் கடற்கரையில் வந்து ஓரால மரத்தடியிற்றங்கி, மேற் செய்ய வேண்டுவனவற்றைப்

பற்றிய அநுமன், சுக்ரீவன் முதலிய துணைவர்களுடன் ஆராயத் தொடங்கியபோது, அம் மரத்திலுள்ள பறவைகளின் ஆரவாரம் தங்கள் ஆராய்ச்சிக்கு இடையூறாக இருந்ததால், அப்பறவைகள் கத்தாமல் செய்துகொண்டு மேல் ஆராய்ச்சியை நடத்தினர் என்பது ஈண்டுக் காட்டப்பட்டதாகும்.

தலைவன் தலைவியை மணந்துகொள்ள வந்த போது, அவர்களைப்பற்றி அலர் தூற்றிக்கொண்டிருந்த ஊர், அங்ஙனம் அலர் தூற்றுதலை விட்டு வாயடங்கியதற்கு, ஆலமரத்திற் பறவைகள் ஒலி யடங்கிய செய்தி உவமையாகக் கூறப்பட்டது இப்பாடலில். இச் செய்தி தமிழ் நாட்டில் வழங்கிய தொன்று. இராமாயணங்களில் காணப்படவில்லை.

"மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன் றரிதினின் முடித்த வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல" (அகம் 220)

இப்பகுதியில் பரசுராமர் செய்தி கூறப்பட்டது. அவர் அரசர்களைக் கொன்று யாகம் செய்தபோது அந்த யாகத்தில் நடப்பட்ட தூண் இங்கு உவமையாகக் கூறப்பட்டது.

தான் மேற்கொண்ட வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகனுக்குக் கூறியதாக உள்ள அக நானூற்று ஒன்பதாவது பாடலில், "சிறார்க், கொடுநுண் ணோதி மகளிரோக்கிய, தொடிமாண் உலக்கைத் தூண்டுரற்பாணி, நெடுமால் வரைய குடிஞையோடிரட்டுங், குன்றுபின் ணொழியப் போகி" என்ற பகுதி திருமால் கோயில் கொண்டுள்ள திருவேங்கடத்தைக் குறிப்பதாகத் தோன்றுகின்றது. நெடுமால் = திருமால்.

சீறூரின்கண் உள்ள மகளிர் தினை முதலியவற்றைக் குற்றும்போது பாடும் பாட்டின் ஓசை, திருமால் எழுந் தருளியுள்ள திருவேங்கட மலையில் உள்ள, குடிஞைகளின் ஓசையோடு சேர்ந்து ஒலிக்கும்படியான குன்றுகள் பிற்படும் படி அவற்றைக்கடந்து சென்று என்றபடி. நெடுமால் வரைய குன்று, குடிஞையோ டிரட்டும் குன்று என்று கூட்டுக. வரை என்றது மலை முழுவதையும் குறித்தது; குன்று என் றது அதன் சிறு பகுதிகளைக் குறித்தது.

'நெடுமால் வரைய' என்பதற்கு நெடிய பெரிய வரையின்கண்ணதாகிய எனப் பொதுவாக மலை என்னும் அளவில் பொருள் கொள்ளலாமே எனின், தலைவன் வேங்கட மலையைக் கடந்து அப்பாற் சென்று பொருளீட்டி மீள்வது மரபு என்பது அகநானூற்றில் பல பாடல்களாலறிகின்றோம். அம்முறைப்படி வேங்கடமலையைக் கடந்து சென்று வினை முடித்து மீள்கின்ற தலைவன் அவ் வேங்கடத்தைக் குறித்தே ஈண்டுக் கூறினன் எனக் கொள்வது பொருத்தமேயாகும். அங்ஙனமாயின், நெடிய பெரிய வேங்கடம் எனக் கொள் ளாது, திருமால் எழுந்தருளியுள்ள வேங்கடம் எனக் கொள்ளுதல் என்னை யெனின், நெடுமால் என்பது திருமா லைக் குறிக்கும் பெயராதலாலும், பழந்தமிழ் நூலாகிய சிலப் பதிகாரத்திலும் புறப் பொருள் வெண்பாமாலை முதலிய பிற்காலத்து நூல்களிலும், திருவேங்கடத்துத் திருமால் கோயில் கொண்டிருத்தல் கூறப்பட்டிருத்தலாலும் இங்ஙனம் பொருள் கொள்ளுதல் பிழையாகாதெனக் கொள்க. மால் வரை என்னுந்தொடரில், மால் = திருமால் எனப் பொருள் கொள்ளுதல் உண்டு என்பதை "மால்வரைநிவந்த சேணுயர் வெற்பில்" என்ற திருமுருகாற்றுப்படை அடிக்கு நச்சினார்க் கினியர் கூறும் உரையால் அறியலாம்.

"வென்றேறி முரசின் விறற் போர்ச் சோழ
ரின்கடுங் கள்ளி னுறந்தை யாங்கண்
வருபுனல் நெரிதரும் இருகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீயிலை யமன்ற மரம்பயில் இறும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் போல" (அகம் 137)

என்ற பகுதியில் திருவரங்கமும் அங்கு நடைபெறும் பங்குனி விழாவும் குறிக்கப்படுகின்றன. பங்குனிவிழா உறையூரில் நடைபெறுவதாகக் கூறுதலும் உண்டு. திருவரங்கத்துப் பங்குனித் திங்கள் உத்திர நட்சத்திரமும் நிறைமதியும் கூடும் நாளில் நடைபெறும் திருவிழாவில் மக்கள் மிகுதியாகத் திரண்டு ஆண்டுக் காவிரியின் இருகரைகளிலும் உள்ள சோலைகளில் தங்கி உணவு சமைத்து உண்டு, திருவிழாக்கண்டு மகிழ்ந்து செல்வர்; அவர்கள் தங்கியிருக்கும்போது அச்சோலை முழுதும் பொலிவுடையதாகத் தோன்றும்; விழா முடிவில் அவர்கள் எல்லோரும் போயபின் அச்சோலை முழுதும் பொலிவிழந்து தோன்றும் என்று மேற்காட்டிய பாடற்பகுதி கூறுகின்றது. இதனால் அப்பங்குனி விழாவின் சிறப்புத் தெளிவாகின்றது.

பதிற்றுப்பத்து.

பதிற்றுப்பத்து என்னும் நூல் முழுவதும் சேர வேந்தர்களைப் பற்றியதாகும். அந்நூலகத்து இரண்டிடங்களிற் றிருமாலைப்பற்றிய குறிப்பு வந்துள்ளது. களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய நான்காம்பத்து முதற்பாடலில்,

"குன்றுதலை மணந்து குழூஉக் கடலுடுத்த
மண்கெழு ஞாலத்து மாந்த ரோராங்குக்
கைசுமந்தலறும் பூசன் மாதிரத்து
நால்வேறு நனந்தலை யோருங்கெழுந் தோலிப்பத்
தெள்ளுயர் வடிமணி யெறியுநர் கல்லென
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி
வண்டேது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅய்
அலங்கற் செல்வன் சேவடிபரவி
நெஞ்சுமலி உவகையர் துஞ்சுபதிப் பெயர"

என்ற பகுதியில், திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலின் கண் மக்கள் வந்து துதித்துச் செல்லும் இயல்பு கூறப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலில் மக்கள் திரண்டு கைகூப்பி வணங்கித் துதிக்கும் ஆரவாரம் நான்கு திசைகளிலும் பரவுகின்றதென்றும், அம்மக்கள் உபவாசமிருந்து வழிபடுகின்றனர் என்றும், விடியற்காலையில் கோயில் மணி அடிக்கப்பட்டவுடன் அவர்கள் எல்லோரும் சென்று நீராடி வந்து பகல் முழுதும் திருமாலைத் துதித்து வழிபட்டிருந்து, இரவில் தங்கள் தங்களிடம் செல்லுகின்றனர் என்றும், அங்ஙனம் செல்வார்க்குத் துணையாகத் திங்கள் ஒளி வீசுகின்றது என்றும் இப்பகுதி கூறுகின்றது. இதனால் அக்காலத்துத் திருவனந்தபுரத்துத் திருமால் திருக்கோயில் மிகச் சிறப்பாக விளங்கிற்றென்பது பெறப்படும். இன்றும் அனந்த பத்மநாபன் திருவனந்தபுரத்து அரசர் குலதெய்வமாக மிகச் சிறப்பாக விளங்குவது கண்கூடு.

செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேர வேந்தனைக் கபிலர்பாடிய ஏழாம்பத்தின் பதிகத்தில்,

"ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி
மாய வண்ணனை மனனுறப் பெற்றவற்கு
ஒத்திர நெல்லின் ஒகந்தூரீத்து"

என்ற பகுதியால் செல்வக் கடுங்கோவாழியாதனுக்குத் திருமாலிடத்துள்ள பக்திச் சிறப்புப் பெறப்படும். அம் மன்னன் புகழ்தல் அமைந்த செல்வம் மிக்க வேள்விகள் பல செய்து, மற்றுமுள்ள அறங்களையும் செய்து முடித்து, திருமாலை வழிபட்டு அப்பெருமான் அருளைப்பெற்று, அப்பெருமான் கோயிலுக்கு ஒகந்தூர் என்னும் ஊரைத் தேவதானமாகக் கொடுத்தான் என்பது இப்பகுதியின் கருத்து. இப்பதிகத்தில் "ஒத்திர நெல்லின் ஒகந்தூரீத்து" என்று கூறப்பட்டது திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலா அன்றி மற்றோரூரிலுள்ள திருமால் கோயிலா என்பது விளங்கவில்லை. திருமால் கோயில்களுக்கு அரசர்கள் ஊர்களைத் தேவதானமாகக் கொடுக்கும் வழக்கம் அக்காலத்தே இருந்தது என்பதும், மக்களிடையே திருமால் வழிபாடு மிக அதிகமாகப் பெருகியிருந்ததென்பதும் இப்பதிகத்தால் அறியலாகும்.

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றிய பதிகத்தில் ஐந்தாவது பாட்டில்,

"ஏமமாகிய சீர்கெழுவிழவின்
நெடியோனன்ன நல்லிசை
ஒடியாமைந்த"

என்ற பகுதியால் அவ்வரசன் புகழுக்குத் திருமால் புகழ் உவமை கூறப்பட்டுள்ளது. அரசர் புகழுக்குத் திருமால் புகழை உவமை கூறுதலை "புகழொத்தீயே யிகழுநர் அடுநனை"

என்ற புறநானூற்றுப் பாட்டு அடியாலுமறியலாம். ஈண்டுத் திருமாலை நெடியோன் என்றார். திருமால் பேருருவெடுத்து உலகளந்த காரணத்தால் அவருக்கு நெடியோன் எனப் பெயராயிற்று எனக் கொள்க. இப்பெயர் திருமாலுக்குரிய காரணப்பெயராகவும் பிற தெய்வங்களுக்கும் அரசர்களுக்கும் இடம் நோக்கி உபசார வழக்காகவும் வழங்குமெனக்கொள்க.

செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பற்றிய பத்தாவது பாட்டில்

"வேள்வியிற் கடவுளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத்தையரின் புறுத்தினை"

என்று அவன் வேள்வியில் கடவுளை வணங்கிய செய்கை கூறப்பட்டது. ஈண்டுக் கடவுள் எனப் பொதுச் சொற் கூறப்பட்டிருப்பினும், பதிகத்திலுள்ள "மாயவண்ணனை மனனுறப் பெற்று" என்ற அடியை நோக்கின், அவ்வரசனால் வேள்வியில் வணங்கப்பட்ட கடவுள் திருமால் என்பது தெளிவாகும்.

நற்றிணை.

எட்டுத் தொகை நூல்களில் முதற்கண் உள்ளகடவுள் வாழ்த்துப் பாட்டுக்கள், அந்நூல்களிலுள்ள பிற பாட்டுக்கள் பாடப்பட்ட காலத்துப் பாடப்பட்டவை யல்ல; பிற்காலத்துப் பெருந்தேவனார் என்பவரால் பாடிச் சேர்க்கப்பட்டவைகளே

என்பது பலர் கருத்தாகும், ஆயினும், நற்றிணையின் முதற்கண் கடவுள் வாழ்த்தாக உள்ள திருமாலைப்பற்றிய செய்யுளின் பொருட் சிறப்பு நோக்கி அஃது ஈண்டுக் காட்டப் படுகின்றது.

மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

இப்பாடலில், திருமால் வேதத்தாற் போற்றப்படும் பரம் பொருள் என்பதும், அவர் உலகிற்குக் காரணப் பொருள் என்பதும், அவர் சக்கரப் படை யேந்திய நிலையும், அவர் எங்கும் பரந்து நிற்கும் வியாபக நிலையும், ஒவ்வொரு பொருளுள்ளும் கரந்து நிற்கும் அந்தர்யாமியாம் நிலையும் நன்கு விளக்கப்படுகின்றன. இப்பாட்டைத் "தீதற விளங்கிய திகிரியோன் வேத முதல்வன், இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய முதல்வன் என்ப" என முடித்துக் கொள்ளுதல் வேண்டும். தீதற = உலகத்திற் குண்டான தீமை ஒழிய, (தீமைகளை ஒழித்து) விளங்கும் திகிரியோன் = அதனால் சிறப்புற்று விளங்குகின்ற சக்கரப் படையை யுடையவன். உலகத்தில் நல்லோர்க்கு இடையூறாகத் தோன்றும் தீயோர்களை ஒழித்து அதனால் விளங்கும் திகிரி எனக் கொள்க. வேத முதல்வன் = வேதத்தாற் கூறப்படும் பரம்பொருள். இனி வேதத்தாற் கூறப் படுகின்ற, உலகத்திற்குக் காரண மான பொருள் என்றுமாம். முதல் = காரணம்.

இயன்ற வெல்லாம் பயின்று = உலகத்தில் தோன்றியுள்ள எல்லாப் பொருளுள்ளும் கரந்துநின்று, அகத்தடக்கிய = (அங்கிலேயிலேயே) எங்கும் பரந்து எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கின்ற என்றபடி. நாராயணன் என்ற பதத்திற்கு நித்தியப் பொருள்கள் எல்லாவற்றையும் தனக்கு இருப்பிடமாக வுடையவன், அப்பொருள்களுக்குத் தான் இருப்பிடமாக வுள்ளவன் என இரு பொருள்கள் கூறப்படுகின்றன. அவ்விரு பொருள்களையும் "இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய" என்ற இவ்வடி விளக்குதல் காண்க.

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறியினுற் றுனும் அவற்றுள் நீற்கும் பிரான்"

என்ற நம்மாழ்வார் பாடற் பகுதியும் இக்கருத்தை விளக்குவதாகும்.

திருமால் எங்கும் பரந்துநிற்கும் நிலையை உருவக முறையிற் கூறுகின்றன முதல் மூன்றடிகள். மாநிலம் சேவடியாக = இப்பெரிய உலகம் திருவடியாகவும், தூநீர் வளைநரல் பௌவம் உடுக்கையாக = தூய நீரையுடைய சங்குகள் ஒலிக்கின்ற கடல் ஆடையாகவும், விசும்பு மெய்யாக = ஆகாயமே திருமேனியாகவும், திசை கையாக = திசைகளே கைகளாகவும் கொண்டு எல்லாவற்றையும் தன் அகத்தடக்கிய வேதமுதல்வன் எனக் கூட்டுக. எனவே முதல் மூன்றடிகள் "அகத்தடக்கிய" என்ற கருத்தை உருவகித்து விரித்துக் கூறிய படியாம். "திகிரியோன்" என்றதனால், கோயில்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார நிலை கூறப்பட்டதெனவும் கொள்ளலாம்.

தூநீர் வளைநரல் பௌவம் என்பதற்குத் தூயநீரை யும் வளைகள் நரலுதலையும் உடைய பௌவம் எனவும், தூய நீர்மையையுடைய வளைகள் நரலுதலையுடைய எனத் தூநீர் என்பதை வளைக்கு அடைமொழியாகவும் கொள்ள லாம். இவ்வாறு இப்பாடல் திருமாலின் பலநிலைகளை விளக்கி நிற்றல் காண்க.

பரிபாடல்.

பரிபாடலில் திருமாலைப்பற்றி 7 பாடல்கள் உள்ளன. அவற்றுள் திருமாலைப்பற்றிய பலபல குறிப்புக்கள் காணப் படுகின்றன. வைணவ சமயக் குறிப்புக்களும் சில காணப் படுகின்றன.

1. திருமால் அவதாரங்கள் பலவற்றுள் ஏழு அவதா ரங்கள் இந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளன. வராகாவதாரம், ஐந்து இடங்களிற் பல வகையாகச் சிறப்பித்துக் கூறப்பட் டுள்ளது.

"கேழல் திகழ்வரக் கோலமோடு பெயரிய
வூழி ஒருவினை யுணர்த்தலின் முதுமைக்கு
ஊழி யாவரு முணரா" (2, 16–18)

பிரளய வெள்ளத்துக்குரிய காலங்கழிந்தபின் உலகம் உண்டாதற் பொருட்டுத் திருமால் வராக உருவங்கொண்டு பூமியை மேலேகொண்டுவந்து நிறுத்திய ஒரு செயலின் பெயரால் இக்கற்பம் வராக கற்பம் என வழங்குகின்றது.

இது போன்ற அவருடைய பல பல செயல்களுக்குரிய கற்பங்கள் இவ்வளவென்று யாவரும் உணர்தல் இயலாது என்பது கருத்து.

"செய்யோள் சேர்ந்தநின் மாசில் அகலம்
வளர்திரை மண்ணிய கிளர் பொறி நாப்பண்
வைவான் மருப்பிற் களிறு மணனயர்பு
புள்ளி நிலனும் புரைபடல் அரிதென
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று"
(2, 31-35)

பிரளய வெள்ளத்தில் மூழ்கிய பூமியைத் திருமால் வராக உருக்கொண்டு தன் கொம்பினால் மேலே எடுத்துவந்த போது புள்ளியளவாகிய நிலமும் அப்பிரளய வெள்ளத்தால் வருந்தவில்லை என வேதப்பொருளை யுணர்ந்தோர் கூறுகின்றனர். ஆனால் திருமகள் எப்போதும் நீங்காது உறையும் மார்பையுடைய திருமால், வராக உருக்கொண்டு பூமிதேவியையும் தம் கொம்பினாற் றூங்கி மகிழ்ந்தனர் என்பது பொருத்தமாகக் காணப்படவில்லை எனச் சாதுரியமாகக் கூறப்பட்டது. (ஒருத்தி மார்பிலிருக்கும்போது மற்றொருத்தியைத் தாங்கி மகிழ்ந்தனர் என்பது பொருந்தாது எனச் சாதுரியமாகக் கூறியபடி)

"தீசெங் கனலியும் கூற்றமும் ஞமனும்
மாசிலா யிரங்கதிர் ஞாயிறுந் தொகூஉம்
ஊழியாழிக்கண் இருநிலம் உருகெழு
கேழலாய் மருப்பின் உழுதோய்........" (3, 21-24)

எல்லாப் பொருளும் அழிதற்குக் காரணமாகிய நெருப்பும், யமனும் அவனுக்கு ஏவல் செய்யும் கூற்றமும்,

சூரியனும் இவையெல்லாம் ஒன்றுகூடும் ஊழியினது முடிவில் பிரளய வெள்ளத்தில் அழுந்திய நிலமகளை வராக உருக் கொண்டு மருப்பிற் பெயர்த்தெடுத்தோய் என்றபடி.

"புருவத்துக் கருவல் கந்தத்தால்
தாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர்புகழ் குன்றினோ டொக்கும்"(4, 22-24)

முன் பிரளய வெள்ளத் தழுந்திய காலத்துத் திரு மால் வராக உருக்கொண்டு தன்னுடைய கருமையும் வலிமை யும் பொருந்திய கழுத்தால் தாங்கி இவ்வுலகத்தை அவ்வெள் ளத்தினின்றும் எடுத்துத் திருத்திய தொழில் மேருமலையின் தொழிலோடொக்கும் என்றபடி. (மேருமலை இப்பூமி தரித்து நிற்கும்படி செய்துகொண்டிருப்பது போன்ற சிறந்த தொழிலாகும் என்பது கருத்து)

"நானிலந் துளக்கற முழுமுதல் நாற்றிய
பொலம்புனை யிதழணி மணிமடற் பேரணி
இலங்கொளி மருப்பிற் களிறுமாகி" (13, 34-36)

என மற்றோரிடத்துக் கூறப்பட்டது. (களிறு = வராகம்)

"கீழேழ் உலகமும் உற்ற அடியினை" (3, 20)

என்றதனால் திருமால் திருவிக்கிரமனாக உலகளந்த செயல் கூறப்பட்டது. (இச்செயல் கூறப்பட்டதனால் இதற்கு முன் மாவலிபால் மூவடி மண் ஏற்ற வாமன அவதாரமும் கூறப் பட்டதாகும்)

"மாவிசும்பு ஒழுகுபுனல் வறள அன்னச்
சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய் எனவும்"(3, 25-26)

என்றதனால் திருமால் அன்னவடிவம் கொண்டநிலை கூறப்பட்டது.

"நகையச் சாக நல்லமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை" (3, 33-34)

என்றதனால் தேவர்கட்கு அமுதங் கொடுத்த காலத்துக் கொண்ட மோகினி யவதாரங் கூறப்பட்டது. திருமால் கொண்ட வடிவினைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே அவுணர்க்கு அச்சமாக முடிய, அமரர்க்கு நல்ல அமிர்தத்தைப் பகுத்துக்கொடுத்தலால் நடுவுநிலை தப்பிய நயமில்லாத ஒருகையினை உடையவர் திருமால் என்பது கருத்து. தேவர் அசுரர் ஆகிய இருதிறத்தாரும் பாற்கடலைக் கடைந்தனராக, தேவர்கட்கு மட்டும் அமிர்தம் கொடுத்தலால் "நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை" என்றார். இங்ஙனம் சாதுரியமாகக்கூறுதல் இயல்பு என்பதை,

"........................ஒருமுகம்
சேறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகோள் நெஞ்சமோடு களம் வேட்டன்றே"

என்ற திருமுருகாற்றுப்படைப் பகுதியாலும், அதற்கு நச்சினார்க்கினியர் உரையாலும் அறியலாம்.

"செயிர்தீர் செங்கட் செல்வநிற் புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்
தலர்ந்த புகழோன் தாதை யாகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சின னாகநீ யிகழா

நன்று நட்டவவன் நன்மார்பு முயங்கி
ஒன்று நட்டவன் உறுவரை மார்பிற்
படிமதஞ் சாம்ப வோதுங்கி
இன்னல் இன்னரோ டிடிமுர சியம்ப
வெடிபடா ஒடிதூண் தடியோடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த வுகிரினை"(4, 10-21)

என்ற பகுதியால் நரசிம்மஅவதாரத்தின் செயல் கூறப்பட்டது. கோபமில்லாமல் இயல்பாகவே சிவந்த கண்ணினையுடைய திருமாலே, பிரகலாதன் உன்னைப் புகழ்தலாலே, இரணியன் கோபத் தீயால் புகைந்த நெஞ்சோடும், புலர்ந்த சந்தனத் தோடும் அப்பிரகலாதனைப் பலவாறு பிணித்துக் கட்டியபோது, அப்பிரகலாதன், தன் தந்தை யாதலின் அவ் விரணியனை இகழாத நெஞ்சை யுடையவனாக இருக்க, நீ அவ் விரணியனை இகழ்ந்து, பிரகலாதன் வருந்தாமல் அவன் நெஞ்சிற் பொருந்தி யிருந்து, உன்னோடு சமமாக இருக்க வரங் கொண்ட அவ் விரணியனுடைய மலைபோன்ற மார்பின் வலிமை அழியும்படி, நீ புறப்பட்ட தூணின் பிளப்புப்போல அவன் உடல் மாமிசம் பல துண்டுகளாகும்படி பிளந்த நகத்தினையுடையை என்பது இப்பகுதியின் கருத்து. திருமால் தம்மிடத்து அன்பு கொண்ட பிரகலாதன் உள்ளத்தில் அன்போடு பொருந்தி யிருந்து கொண்டே இரணியன்மீது கோபித்து அவனை யழித்தனர் என, ஒரே காலத்தில் அவருடைய அன்பும் கோபமுமாகிய இருவகைப் பட்ட நிலைமை கூறப்பட்டது. நம்மாழ்வார் இங்ஙனமே,

தோற்றக் கேடவை யில்லவன் உடையான்
அவனொரு மூர்த்தியாய்ச்
சீற்றத்தோ டருள்பெற்றவ னடிக்கீழ்ப் புகநின்ற
செங்கண்மால்

நாற்றத் தோற்றச் சுவையொலி யுறலாகி
நின்ற எம் வானவர்
ஏற்றையே யன்றி மற்றொருவரை யானிலேன்
எழுமைக்குமே.

என்ற பாசுரத்தில் பிரகலாதனிடத்து அன்பும் இரணிய னிடத்துக் கோபமும் ஒரே காலத்திற் கொண்ட நிலைமையை அருளிச் செய்துள்ளனர். இந்நிலையை வியாக்கியான ஆசிரியர், "சிங்கம் யானையின்மீது பாயும் போதும், தன் குட்டிக்குப் பாலுண்ணக் கொடுக்கு மன்றோ" என்ற உதாரணத்தால் விளக்கி யுள்ளனர்.

"நீயே, வளையோடு புரையும் வாலியோற்கவன்
இளையன் என்போர்க்கு இளையை யாதலும்
புதையிருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு
முதியையென் போர்க்கு முதுமை தோன்றலும்" (2, 20-23)

என்ற பகுதி கண்ணன் பலதேவன் ஆகிய இரு அவதாரமும் கூறுகின்றது.

நீ சங்கு போன்ற வெண்மையான திருமேனியை யுடைய பலதேவருக்குத் தம்பி என்று கூறுவர் சிலர்; அவர்கள் அங்ஙனம் கூறும்படி கண்ணனாக அவதரித்த அவதார முறையால் பலதேவருக்குத்தம்பியாக உள்ளனை. அவதாரங்கட்கு முற்பட்ட வாசுதேவ மூர்த்தியாக உள்ள உன்நிலைமை கருதி, எல்லாப் பொருளையும் மறைக்கும் இருள் போன்ற ஆடையையும் பனை எழுதப்பட்ட கொடியையும் உடைய அப் பலதேவருக்கு முதியை என்று கூறுவோர் கூறும்படி முதுமையும் உடையை என்பது கருத்து.

15-வது பரிபாடல் கண்ணன் பலதேவன் ஆகிய இருவரையும் பற்றி அழகாகக் கூறுகின்றது. திருமாலிருஞ் சோலை மலையில் அவ்விருவர் வடிவமும் வைத்து வணங்கப் பட்டு வந்தன எனவும் அப்பாடல் கூறுகின்றது.

"கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்
எரிசினங் கொன்றோய்......................"(3, 31-32)

என்ற பகுதியால் கண்ணன் கேசியைக் கொன்ற வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

2. இங்ஙனம் திருமால் மேற்கொள்ளும் அவதாரத் தின் தன்மை அவதரித்துச் செய்யும் செயல் இவைகளைப் பரிபாடல் மிக அழகாகக் கூறுகின்றது.

"இருவர் தாதை இலங்குபூண் மாஅல்
தெருள நின்வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே" (1, 28-30)

திருமால் மேற்கொள்ளும் அவதாரத்தின் தன்மை யைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல், ஐயந்திரிபற்ற மெய்ஞ்ஞானத்தையுடைய சான்றோர்க்கும் அரிதாகும் என் பது கருத்து. பிற உயிர்கள் போல் இருவினை வயப்பட்டு அவ்வினைப் பயனை அனுபவிப்பதற்குப் பிறவாமல், உயிர் களுக்கு நன்மை புரியும் பொருட்டுத் தம் இச்சையினுல் அவ தாரங்களை மேற் கொள்ளுதலால் இங்ஙனம் கூறினர் எனக் கொள்க. அவதாரம் என்ற சொல்லுக்கு மேலிருந்து கீழி றங்குதல் என்பது பொருளாதலின், அதற் கேற்பத் "தெருள நின் பிறப்பறிதல்" என்னுமல் "தெருள நின் வர வறிதல்" என்று கூறியது கருதத் தக்கது (இங்ஙன மாயினும்

சில இடங்களில் அவதாரம் என்ற கருத்தில் பிறப்பு எனக் கூறுதலும் உண்டு. அதனை மரபு வழுவமைதியாகவே கொள்ளுதல் வேண்டும்)

"முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே" (3, 71–72)

எனப் பிறிதோரிடத்துக் கூறப்பட்டுள்ளது. முதன்முறை இடைமுறை கடைமுறைத் தொழில் என்றது படைத்தல் காத்தல் அழித்தல் எனக்கொள்ளலாம். இத் தொழில்கள் காரணமாக நீ பிறவாத பிறப்பில்லை; ஆனால் உன்னைப் பிறப்பித்தவர் யாவருமில்லை யென்பது கருத்து. பிறப்பித்தோரில்லை என்றதனால் திருமால் வினவயப்பட்டுப் பிறவாமையும் அவருக்கு மேற்பட்டதோர் தெய்வமின்றி அவரே பரம் பொருளாதலும் பெறப்படும்.

"பிறப்பில் பல்பிறவிப் பெருமானை
மறப்போன் றின்றி என்றும் மகிழ்வனே"

என்ற நம்மாழ்வார் அருளிச் செயல் காண்க.

"அஜாயமானோ பஹுதா விஜாயதே
தஸ்யதிரா: பரிஜாநந்தி யோநிம்"

என்பதும், (பிறப்பில்லாத இறைவன் பல பிறப்புக்களை மேற் கொள்ளுகின்றனன்; அதன் காரணத்தைப் பெரியோர்கள் நன்கு அறிகின்றார்கள் என்பது கருத்து)

நான் பிறப்பற்றவனும் அழிவில்லாதவனும் உயிர்களனைத்திற்கும் ஈசனாகவு மிருந்தும், எனது இயற்கையைக் கொண்டு என் மாயா சக்தியால் சன்மம் எடுக்கிறேன் (கீதை 4-9) என்பதும் இங்குக் கருதத் தக்கன.

இங்ஙனம் அவர் பிறந்து செய்யும் காரியம் என்? எனின், நல்லோரைக் காத்தற்கும், தீயோரை யழித்தற்கும், அறத்தை நிலை நிறுத்துதற்கும் பிறக்கின்றேன் எனக் கண்ணன் கீதையிற் கூறினன். இதில் மூன்று செயல்கள் கூறப்பட்டனவாயினும் நல்லோரைக் காத்தலே முதன்மையானது. தீயோரை யழித்தல் இறைவன் கருத்தன்று. தீயோர் இருந்தாத விடத்து நல்லோரைக்காத்தற் பொருட்டு அழிக்கப் படுகின்றனர்.

சூரியன் எல்லோருக்கும் நன்மையாகவே வெயிலை வீசுகின்றது. எலும்பில்லாத புழு தானாகவே அவ்வெயிலிற் சென்று இறக்கின்றது. அப்புழுவைக் கொல்ல வேண்டிச் சூரியன் வெயில் வீசவில்லை. அதுபோல இறைவன் செயலையுங் கொள்ளுதல் வேண்டும்.

"என்பிலதனை வெயில் போலக்காயுமே
அன்பிலதனை அறம்"

என்ற திருக்குறள் கருத்து ஈண்டுக் காணத்தக்கது.

இத்தகைய இறைவன் செயலின் தன்மையைப் பரிபாடல் மிக அழகாகக் கூறுகின்றது.

"பொருவேம் என்றவர் மதந்தபக் கடந்து
செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்" (1, 26-27)

திருமாலிடத்து அன்பு கொண்டு நன்னிலை யடையாது "உன்னோடு யுத்தமே செய்வேன்" என்று முற்படுவோர் வலிமையை யழித்துப் போரில் மேம்பட்ட குற்றந் தீர்ந்த தலைவனே என்பது இதன் கருத்து. தன்வழி வாராமல் 'பொருவேம்' என்று எதிர்த்து நிற்பவரையே இறைவன்

அழிக்கின்றனன் என்றும், அதனல் செயிர்தீர் அண்ணலாக (குற்றமற்ற தலைவனாக) விளங்குகின்றனன் என்றும் கூறிய கருத்துச் சிறந்த உண்மையாகும்

இராமபிரான் வானரப் படையோடு கடலில் யணை கட்டி இலங்கை சென்றடைந்தபின், அப்போதாவது இராவணன் இணங்க மாட்டானா என்று கருதி, அங்கதனைத் தூதனுப்பியதும், முதல் நாட் போரில், இராவணன் துணையற்று, ஆயுதமிழந்து நின்ற நிலையில், இனியேனும் இணங்க மாட்டானா என்றெண்ணி, அப்போது கொல்லாது, "இன்று போய் நாளைவா" என அனுப்பியதும் மேற்கூறிய இறைவன் இயல்பைத் தெளிவாக விளக்குவனவாகும்.

"எவ்வயின் உலகத்தும் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்" (15, 51-52)

என்றும்,

ஒருமை வினைமேவும் உள்ளத்தினை (13, 49)

என்றும் அப்பரிபாடல் கூறுகின்றது. எவ்வுலகத்தினும் தோன்றி அவ்விடத்து உயிர்களின் துன்பங்களைப் போக்குவோன் என்பது முன்னதன் கருத்து. (மறுக்கத் துன்பம் = பிறவித்துன்பம். என்பது பரிமேலழகர் உரை. பொதுவாகத் துன்பம் எனவும் கொளலாம்) உயிர்களிடத்து அன்பு செலுத்துதலாகிய ஒருவினை பொருந்திய உள்ளத்தினை உடையை என்பது பின்னதன் கருத்து.

3. "பொன்னணி நேமி வலங்கொண் டேந்திய
மன்னுயிர் முதல்வனை யாதலின்" (1, 52-53)

என்பதனல் திருமால் உயிர்களுக்குத் தலைவர் என்பதும்,

"வடுவில் கொள்கையி னுயர்ந் தோராய்ந்த
கெடுவில் கேள்வியுள் நடுவாகுதலும்
இந்நிலைத் தெரிபொருள் தேரின் நின்னிலை"(2, 24-26)

என்பதனால் அவர் உயிர்களுக்குள் அந்தர்யாமியாக நிற்கும் நிலையும் கூறப்பட்டன. (தவறில்லாத விரதங்களையுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால் தெரிந்து உணரின் உயிர் தோறும் உயிர்தோறும் அந்தர்யாமியாக நிற்கும் இந்நிலைமை நின் தொன்னிலைமை போல் உனக்கேயுள்ள விசேடம் என்பது பின்னதன் கருத்து. கெடுவில் கேள்வி = வேதம். தெரி பொருள் = உயிர்.)

4. முன்னை மரபின் முதுமொழி முதல்வ (3, 47)

என்பதனால் திருமால் வேத முதல்வர் என்பது கூறப்பட்டது. (அநாதியாய் வருகின்ற வேதத்திற்குத் தலைவனே என்பது பொருள் வேதத்திற்குத் தலைவன் என்றது வேதத்தாற் கூறப்படும் பரம் பொருள் என்றபடி) அவர் பெருமைகளையும் இயல்புகளையும் வேதம் கூறும் முறை சில பரிபாடலிற் கூறப்பட்டுள்ளன.

"நின்னது திகழொளி சிறப்பிருள் திருமணி
கண்ணே, புகழ்சால் தாமரை யலரிணைப் பிணையல்
வாய்மை வயங்கிய வைகல் சிறந்த
நோன்மை நாடின் இருநிலம் யாவர்க்கும்
சாயல் நினது வானிறை யென்னும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" (2, 52–57)

என்பது ஒரு பகுதி. இதனைப் பாடிய ஆசிரியர் உன்மேனி யொளி சிறந்த நீலமணியை யொக்கும்; உன்னுடைய

கண்கள் இரண்டு தாமரை மலர்களைச் சேர்த்து வைத்தாற் போலும்; உன்னுடைய வாய்மை தப்பாது வருகின்ற நாளை யொக்கும்; உன்னுடைய பொறுமை பூமியை ஒக்கும்; யாவர்க்கும் ஒத்த உன்னுடைய அருள் நீர் நிறைந்த மேகத்தை ஒக்கும் என்று அருமறைப் பொருள் கூறும் எனத் திருமாலை நோக்கிக் கூறுகின்றனர். தாமரை மலர் ஒருவாற்றாற் கண்ணுக்கு உவமையாகுமே யன்றி முற்றிலும் உவமையாகாது என்னும் கருத்துத் தோன்றக் "கண்ணே, புகழ்சால் தாமரை அலரிணைப் பிணையல்" என்றார். "புகழ் சால் கண் தாமரை யலரிணைப் பிணையல்" என மாற்றி எப் போதும் அருள் நிரம்பிய கண்ணாதலின் "புகழ் சால்கண்" எனப்பட்டது என்றும் பொருள் கொள்ளலாம். தாமரைக் கண்ணன் என்பது திருமாலுக்கொரு சிறப்புப் பெயராதலின் அப்பகுதியைச் சிறப்பாகக் கூறினர் என்றும் கொள்ளலாம்.

> "தாம் வீழ்வார் மென்றோள்துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணானுலகு"

என்ற திருக்குறளுரையில் பரிமேலழகர், தாமரைக் கண்ணா னுலகு என்பதற்கு இந்திரானுலகு என்றுரைப்பாருமுளர். அஃது அவனுக்குப் பெயரன்மையின் அஃது உரையன்மை யறிக எனக் கூறியிருத்தல் காண்க. எனவே அப்பெயர் திருமாலுக்குரிய பெயரென்பது பெறப்படும். (கப்யாஸம் புண்டரீகம்..என்ற உபநிஷத்தின் பொருள் ஈண்டு உணர்க.)

> "தீவளி விசும்பு நில னீரைந்து
> ஞாயிறுந் திங்களும் அறனும் ஐவரும்
> திதியின் சிறாரும் விதியின் மக்களும்
> மாசில் எண்மரும் பதினொரு கபிலரும்

தாமா விருவரும் தருமனு மடங்கலும்
மூவே ழுலகமும் உலகினுண் மன்பதும்
மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்
மாயா வாய்மொழி யுரைதர வலந்து" (3, 4-11)

என்பது மற்றொரு பகுதி. தீ, வளி, விசும்பு, நிலன், நீர் ஐந்தும் ஞாயிறும், திங்களும், அறனும் என்றதனுல் திருமால் அட்ட மூர்த்தங்களாக விளங்கும் நிலைமை கூறப்பட்டது. (வளி = காற்று. விசும்பு = ஆகாயம். அறன் = வேள்விமுதல் வன்; யமானன். என்றபடி) முக்கிய கிரகங்கள் ஏழுள் ஞாயிறும் திங்களும் அட்ட மூர்த்தத்தில் கூறப்பட்டமையால் ஏனைய ஐந்து கிரகங்களையும் "ஐவரும்" என்ருர் (ராகு கேதுக்கள் சாயாக் கிரகங்கள் என்று கூறப்படுதலின் அவை ஈண்டுக் கூறப் படவில்லை) திதியின் சிறுர் = அசுரர். விதியின் மக்கள் = ஆதித்தர் பன்னிருவர். எண்மர் = அஷ்டவசுக்கள். பதினெரு கபிலர் = உருத்திரர் பதினெருவர். தாமா விருவர் = அச்சுவினி தேவ ரிருவர். தருமன் = யமன். மடங்கல் = யமனுக்கு ஏவல் செய்யும் கூற்றம். மூவேழுலகமும் உலகினுண் மன்பதும் = மூவேழுலகங்களும் அவற்றிலுள்ள ஏனைய உயிர்க் கூட்டமும். தேவர் முதலிய உயிர்த் தொகுதி எல்லாம் உன்னிடத்துத் தோன்றிய தன்மையை வேதம் விரிவாக எடுத்துக் கூறும். சிற்றறிவினேமாகிய யாம் அறிந்தவாறு சிலவற்றை முறை பிறழ ஈண்டுக் கூறினேம் என்பது இப் பகுதியின் பொருள்.

"ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அருவாகி" (4-3-3)

என்ற திருவாய் மொழிப் பாசுரப் பகுதி திருமால் அட்ட மூர்த்தமாக விளங்கும் நிலை கூறியதெனக் கொள்ளலாம். (அரு = உயிர்.)

சாமவேதம் கூறும் முறை ஓரிடத்து அழகாகக் கூறப்படுகின்றது.

"ஏஎ இனகிளத்தலின் இனைமைநற் கறிந்தனம்
தீயினுள் தேறல்நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலும்நீ
வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும் நீ
அனைத்தும்நீ அனைத்தினுட் பொருளும்நீ யாதலின்
உறைவும் உறைவதுமிலையே.........." (3, 62-69)

என்பது அப்பகுதியாகும். சாமவேதம் "ஏ எ" என்னும் இசையுடையதாதலின் அவ்வேதத்தை "ஏ எ" என்று கூறினார். தீயினுள் தேறல் = தீயினிடத்துள்ள அழிக்கும் சக்தி. கல் = இரத்தினக் கற்கள். கல்லினுள்மணி = அக்கற்களிடத்துள்ள ஒளி. கல்லினுள்மணி என்பதற்குக் கற்களுள் சிறந்த நீலமணி என்றும் கொள்ளலாம். அறத்தினுள் அன்பு = அறஞ்செய்பவர் மனத்திலுள்ள இரக்கம். அன்போடு அறஞ் செய்பவரே உண்மையாக அறஞ்செய்பவராவர். உள்ளத்து அன்பின்றிச் செய்வோர் பிறர் புகழ்தற்குச் செய்பவராவர். அப் புகழ்ச்சி யெய்தாதெனின் அவர் அறஞ் செய்தலும் இல்லையாகும். ஆதலின் அன்போடு அறஞ்செய்பவரிடத்துள்ள அன்பை இறைவனாகக் கூறினர். "அறத்துக்கே அன்பு சார் பென்ப" என்ற திருக்குறட் கருத்தும் காண்க. வேதத்து மறைநீ = வேதத்தில் உபநிஷத்தாகிய பாகம் நீ. வேதத்தில் உபநிஷத்துப் பகுதி இறைவனுடைய இயல்பு, தத்துவ ஆராய்ச்சி இவற்றைக் கூறுவதாதலின் அப்பகுதியாற் கூறப்படும் பொருள் நீ என்பது கருத்து. "அனைத்தும் நீ அனைத்தினுட் பொருளும் நீ" என்றது இக்குச் சொல்லப்

படாத எல்லாப் பொருளும் நீ அவற்றின் உட்பொருளும் நீ என்றபடி. இவ்விடத்து இன்னும் சில கருத்துக்கள் கூறப் பட்டுள்ளன. இப்பகுதியை நோக்குமிடத்துக் கண்ணன் அருளிச் செய்த கீதையில் ஏழாம் அத்தியாயத்தில், நீரில் சுவைநான், சூரிய சந்திரர்களின் ஒளி நான், ஆகாயத்தில் ஒலி நான், ஆடவர்களின் ஆண்மைநான், அறிஞர்களின் அறிவு நான், காந்தியுடையோரின் காந்தி நான் என்றிங்ஙன மாகக் கூறப்பட்டவற்றோடு இப்பகுதி ஒத்து விளங்குதல் காணலாம்.

“நின்னிற் றோன்றிய நிரையிதழ்த் தாமரை
அன்ன நாட்டத் தளப்பரியவை
நின்னிற் சிறந்த நின்தாளிணையவை
நின்னிற் சிறந்த நிறைகட வுளவை
அன்னோரல்லா வேறுமுளவவை
நின்னோரன்னோர் அந்தணர் அருமறை” (4, 60-65)

என வேறோரிடத்துக் கூறப்பட்டது.

இப் பரிபாடலில் வேறிடங்களில் வேதங் கூறியதாகக் கூறாமல் பொதுவாக

“நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலும் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள
நின், தோற்றமும் அகலமும் நீரினுள
நின், உருவமும் ஒலியும் ஆகாயத்துள
நின், வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள”

என்றும், (4, 25-32)

"விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க்கு அளியும் நீ
திறனிலோர்த்திருத்திய தீதுதீர் சிறப்பின்
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ
அங்கணேர் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும் தெறுகதிர்க் கனலியும் நீ
ஐந்தலை யுயரிய அணங்குடை யருந்திறல்
மைந்துடை யொருவனும் மடங்கலும் நீ
நலமுழுதளைஇய புகரறு காட்சிப்
புலமும் பூவனும் நாற்றமும் நீ
வலனுயர் எழிலியும் மாகவிசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ" (1, 37—48)

என்றும் திருமாலைப்பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றையும் ஈண்டுச் சேர்த்து நோக்குதல் பொருத்தமாம்.

முதற் பகுதியில் உன்னுடைய வெப்பமும் விளக்கமும் சூரியனிடத்தில் உள்ளன, உன்னுடைய குளிர்ச்சியும் மென்மையும் சந்திரனிடத்தில் உள்ளன என்றிங்ஙனமாகக் கொள்ளுதல் வேண்டும். சுரத்தல் = கொடுக்கக் கொடுக்கப் பொருள் மேன்மேலும் வளர்தல். வண்மை = கொடுத்தல். புரத்தல் = எல்லா உயிர்களையும் காப்பாற்றுதல். நோன்மை = பிறர் செய்த குற்றம் பொறுத்தல்; அன்றி எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமாக நின்று தாங்குதல் என்றும் கொள்ளலாம். நாற்றமும் ஒண்மையும் பூவையுள = உன்னுடைய திருமேனியின் நாற்றமும் காந்தியும் காயாம்பூவினிடத்து உள்ளன. தோற்றமும் அகலமும் நீரின் உள = நீ வெளிப்படுந்தன்மையும் உன் பெருமையும் நீரினிடத்து உள்ளன. நாராயணன் என்பது நீரையிடமாக உடையவன் என்றும்

பொருள்படுமாதலின், அக்கருத்து "நின் தோற்றமும் அகலமும் நீரினுள" என்பதில் அமைந்திருத்தல் காணலாம்.

"நீரார் பேரான் நெடுமாலவனுக் கிடமா மலையாவது
நீர்மலையே" (பெ—தி) என்பது காண்க

உருவம் = ஞானக்கண்ணாற் காணப்படும் உருவம். ஒலி = சொல். அன்பர்களின் ஞானக்கண்ணுக்கு இலக்காகும் உன் உருவமும், சப்த ரூபமாகஉள்ள உன் தன்மையும் ஆகாயத்தினிடத்து உள்ளன.

"நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின், உருவமும் ஒலியும் ஆகாயத்துள"

என்ற பகுதிகளின் கருத்து.

"கரவிசும்பு எரி வளி நீர்நில மிவை மிசை
வரன்நவில் திறல் வலிஅளி பொறையாய் நின்றபரன்"

என்ற திருவாய்மொழிப் பகுதியில் ஓரளவு அமைந்திருத்தல் காண்க. வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள = நீ அவதரித்தலும், மீண்டும் உன்னுடைச் சோதிக்கெழுந்தருளுதலும் காற்றின்கண் உள்ளன.

பிற்பகுதி = விறன்மிகு விழுச்சீர் அந்தணர் = எவ்வுயிரிடத்தும் அருளுடைய முனிவர் "விறன் மிகு விழுச்சீர்" என்றது அருளுடைமையில் மேம்பட்ட வெற்றியும் அதனால் உண்டான சிறப்பும் எனக்கொள்க. அவரவர்கள் கைக்கொண்டொழுகும் அறமும், அன்புடையாரிடத்துக் கொள்ளும் மனவிரக்கமும் நீ என்றபடி. திறனிலோர்த் திருத்திய தீதுதீர் சிறப்பின் மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ = நல்வழிப்

படாதவர்கள் திருந்தும்படி செய்த, குற்றமற்ற சிறப்பினை யுடைய வீரமும், ஒரு ஞான்றும் நல்வழிப்படாத பகைவர் கட்குச் செய்யும் துன்பமும் நீ. மறன் திறனிலோர்களைத் திருத்துதற்காகக் கொள்ளப்படுதலின், அதனைத் தீது தீர் சிறப்பின் மறன் என்றார். இறைவனுக்குப் பகைவர் நட்பினர் என்ற வேறுபாடின் றெனினும், நல்லோர்க்குத் துன்பமிழைப்பவர் இறைவனுக்குப் பகைவராகின்றனர் ஆதலின், அவர்களை மாற்றலர் என்றார். அறனும், அளியும், மறனும், அணங்கும் என இறைவன் இயல்புகளைக் கூறினர்; மேல் அவன் வடிவங்களைக் கூறுகின்றனர். "திங்களும் தெறுகதிர்க் கனலியும்நீ" = திங்களும் எல்லாப்பொருள்களையும் அழிக்கும் ஒளி பொருந்திய தீயும் நீ. திங்களும் தீயும் சொல்லப்பட்டதனுல் உபலக்ஷணத்தால் மற்றொரு பொருளாகிய சூரியனும் கொள்ளப்படும். இனி இவ்வரி "திங்களும் தெறுகதிர் கனலியும் நீ" எனப் பாடமிருப்பின் பொருத்தமாகும் தெறுகதிர் = சூரியன். தெறுகதிரும் என எண்ணும்மை விரித்துக் கொள்ளலாம். ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் மைந்துடை ஒருவன் = சிவபெருமான். சிவபெருமானும் அவருடைய அழித்தற்றொழிலும் நீ என்றபடி. நலமுழுது அளைஇயபுகாறு காட்சிப்புலம் = அறங்களையெல்லாம் தன்னிடத்தேகொண்ட குற்றமற்ற ஞானத்தைத்தரவல்ல வேதம். பூவன் = தாமரைப்பூவின்கண் உள்ள பிரமன். நாற்றம் = உலகத்தோற்றம். வேதமும் அதனையோதும் பிரம்மாவும் அவருடைய படைத்தற்றொழிலும் நீ என்றபடி. திருமால், பிரமன் சிவன் இவர்களுள் அந்தர்யாமியாகநின்று அவரவர் தொழிலைச் செய்கின்றனர் என்னுங்கருத்தால் சிவபெருமானும் அவருடைய அழித்தற்றொழிலும், பிரம்மாவும் அவருடைய படைத்தற்றொழிலும் நீ என்றனர். எழிலி = மேகம்.

மேகமும், விசும்பும், நிலனும், இமயமும் நீ என்றது உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் நீ என்றபடி. இதற்கும் எல்லாப்பொருள்களுக்குள்ளும் அந்தர்யாமியாக நின்று நடத்துகின்றனை என்பது கருத்தாகக் கொள்க.

5. "கடு நவை யணங்கும் கடுப்பும் நல்கலும்
கோடுமையும் செம்மையும் வெம்மையும் தண்
உள்வழி யுடையை இல்வழி இலையே [மையும்
போற்று ருயிரினும் போற்றுந ருயிரினும்
மாற்று ஏமாற்றல் இலையே நினக்கு
மாற்ருே ரும்மிலர் கேளிருமிலரேனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே"
(4, 49—55)

என்ற பகுதியில் திருமாலுடைய 'வேண்டுதல் வேண்டாமை' இன்மையாகிய இயல்பு விளக்கப்படுகின்றது.

மிக்க துன்பமுண்டாக வருத்தும் வெகுளியும், (கடுப்பு = வெகுளி) அருள் புரிதலும், நடு நிலை திறம்புதலும், நடுநிலை திறம்பாமையும் ஆகிய இவை பாவமும் அறமும் உடையாரிடத்து உடையையாக இருக்கின்ருய்; இல்லார் இடத்து இல்லாயாய் இருக்கின்ருய்; அவ்வளவல்லது, வேண்டாதவரை யழித்தலும் வேண்டியவர்க்கு இன்பம் செய்தலும் நீ உடையையல்லை. ஏனெனின், உனக்கு வேண்டாதாரும் வேண்டியவரும் இல்லையாதலால். பாவமுடையவருக்கு அவர் தன்மையால் நீ அவரை வருதுபவனுகின்ருயல்லது உனக்கு அவர்களை வருத்தும் இயல்பில்லை. அறமுடையார்க்கு அவர் தன்மையால் நீ அருள்செய்பவனுகின்ருயல்லது உனக்கு அத்தன்மையில்லை என்றபடி.

"அகலில் அகலும் அணுகில் அணுகும்
புகலும் அரியன் பொருவல்லன் எம்மான்"

"உற்றார்க ளெனக்கில்லை யாருமென்னும்
உற்றார்களெனக்கிங் கெல்லாரு மென்னும்"

என்ற திருவாய்மொழிப் பகுதிகளும், அருச்சுனனும் துரியோதனனும் கண்ணனைப் படைத்துணையழைத்த வரலாறும் ஈண்டு நினைத்தற்குரியன.

.........பகைவ ரிவரிவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோநின் மரபறி வோர்க்கே (3, 57-58)

என இக் கருத்துப் பரிபாடலில் பிறிதோரிடத்தும் கூறப் பட்டது.

இங்ஙனம் "வேண்டுதல் வேண்டாமை" இன்மையும், அவரவர் தன்மையால் அவையுடைமையும் கூறப்பட்டாற் போல, தனக்கென வடிவம் வேறின்மையும், அன்பர் நினைந்த வடிவாக நின்று அவர்க்கு அருள் செய்தலும் ஆகிய தன்மை,

"மனக்கோள் நினக்கென வடிவு வேறிலையே" (4, 56)

என்பதனால் விளக்கப்பட்டது. (நினக்கென்று நின் மனத்துக் கொண்ட தனி வடிவம் ஒன்றுமில்லை என்பது கருத்து)

"பேணுங்காற் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம்பெருமானைக் கூறுதலே"

"தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே"

என்ற பகுதிகளும் அக் கருத்தை விளக்குவனவாம்.

6. திருமாலே வீடுபேறளித்தற்குரியவர் என்பது பரிபாடலிற் பல இடங்களிற் பல வகையாகக் கூறப்பட்டுள்ளது.

....நின்
திருவரை அகலம் தொழுவோர்க்கு
உரிது அமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து
13, 11-13)

(திருமகள் தங்கிய நின்மார்பினைத் தொழுவோர்க்கு, உனக்கு உரியதாக நீ எழுந்தருளியுள்ள வைகுண்டம் உரியது என்பது கருத்து) என உடன்பாட்டு முகத்தாலும்,

"நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை
ஏறுதலெளிதோ வீறுபெறு துறக்கம்" (15, 15-16)

(மணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையையணிந்த திருமால் அருள்புரிந்தாலல்லது வீறு பெறு துறக்கமடைதல் எளிதாகுமோ? என்பது கருத்து)

என எதிர்மறை முகத்தாலும் கூறப்பட்டிருத்தல் காண்க. உரிதமர் துறக்கம் எனவும் வீறுபெறு துறக்கம் எனவும் சிறப்பித்ததனுல் அஃது புண்ணியப்பயனை யனுபவித்து மீளுதற்குரியதன்று; வாரா உலகமாகிய அந்தமில் பேரின்பத் தழிவில் வீடு என்பது பெறப்படும்.

"மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி
மணிதிக முருபின் மாஅ யோயே (3, 1-3)

என்ற பகுதியில் அக்கருத்து நன்கு விளக்கப்பட்டது. மாயோனே! மாயோனே! அடைந்தாரது பிறப்பையறுக்கும் சேவடியையும் நீலமணி போல விளங்குகின்ற நிறத்தையுமுடைய மாயோனே என்பது கருத்து.

இருமை வினையுமில ஏத்துமவை (13, 48)

என நின்னை ஏத்தும் அன்பர் இருவினையுமுடையரல்லர் என்றதனால் அக்கருத்து வேறொருவகையாற் கூறப்பட்டதாயிற்று.

"மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி
மணிதிக ழுருபின் மாஅயோய்" என்றதும்

"பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்றதும் ஒரு கருத்தினவாதல் காண்க.

இப் பயன் பெறுதற்குப் பிராட்டி புருஷகாரம் ஒரு தலையாக வேண்டுமென்ற வைணவ சமயக் கொள்கை,

"..................................நின்
திருவரை யகலந் தொழுவோர்க்கு
உரிதமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து"

என்ற பகுதியில் புலப்படுகின்றது.

"மெல்லிய வெனஅ வெறுஅது அல்லியந்
திருமறு மார்பநீ யருளல் வேண்டும்" (1, 35–36)

என்ற பகுதி அக்கொள்கையை நன்கு விளக்குகின்றது. யான் உன்னைத் துதித்துக் கூறும் சொற்கள் சிறந்த சொற்களாக இல்லை என்று கருதி வெறுக்காது திருமகள் தங்கிய மார்பையுடைய நீ அருள்புரிதல் வேண்டும் என்றபடி. அருள் புரிதல் வேண்டும் என வே டிக்கொள்ளுமிடத்து "அல்லியந் திரு மறுமார்ப" எனப் பிராட்டியோடு கூடிய நிலை கூறப் பட்டமையால், பிராட்டி புருஷகாரம் இன்றியமையாதது என்பது விளக்கப்பட்டதாகும்.

திருமால் திருவடிகள், அடைந்தவர்களுடைய பிறப்பையறுக்கும் என்பதுமட்டு மன்றி,

"முடிந்தது முடிவது முகிழ்ப்பது மவைமூன்றும்
கடந்தவை யமைந்த கழல் நிழலவை" (13, 45–46)

என அவை முக்காலங்களையும் கடந்தவை (கால தத்துவத்தைக் கடந்தவை) என்றுங் கூறப்பட்டன. அவர் திருவடிகள் முக்காலங்களையும் கடந்தவை என்றாலும் அவர் முக்காலங்களையும் கடந்தவர் என்பதே கருத்தாகக் கொள்க.

7. தத்துவ ஆராய்ச்சி, திருமாலைப்பற்றிய தோத்திர முறையில் இரண்டிடங்களிற் கூறப்பட்டுள்ளது.

"பாழெனக் காலெனப் பாகென ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
நால்வகை யூழிஎண் நவிற்றுஞ் சிறப்பினை" (3, 77-80)

என்பது ஒன்று. பாழ் = ஆன்மா. கால் = ஆகாய முதலிய வைம்பூதம். பாகு = வாக்கு முதலிய கன்மேந்திரியங்கள். ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து = சப்த ஸ்பரிச ரூப ரசகந்தங்கள். ஆறு = ஞானேந்திரியங்களும் மனமும். ஏழு = அகங்காரம். எட்டு = மான். தொண்டு = மூலப் பகுதி. எனவே மூலப்பகுதி முதலிய தத்துவம் இருபத்து நான்கும் ஆன்மாவுமாகிய இருபத்தைந்து தத்துவங்களாலும் நால்வகை யுகங்களிலும் ஆராயப்படும் சிறப்பினையுடையை என்றபடி. ஆராய்தலாவது இவ்விருபத்தைந்து தத்துவங்களிலும் அந்தர்யாமியாக நின்றும் இவற்றிற்கு அப்பாற்பட்ட இருபத்தாறாவது தத்துவமாக உள்ளவன் இறைவன் என்றுணர்தலாம்.

"சுவைமை இசைமை தோற்றம் நாற்றம் ஊறு
அவையும் நீயே அடுபோர் அண்ணல்
அவையவை கொள்ளும் கருவியும் நீயே
முந்தியாங்கூறிய ஐந்தனுள்ளும்
ஒன்றினிற் போற்றிய விசும்பும் நீயே
இரண்டின் உணரும் வளியும் நீயே
மூன்றின் உணரும் தீயும் நீயே
நான்கின் உணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே அதனால்,
நின்மருங்கின்று மூவேழுலகமும்
மூலமும் அறனும் முதன்மையினிகந்த
காலமும் விசும்பும் காற்றோடு கனலும்" (13, 14–25)

என்ற பகுதி மற்றொன்று. அவையவை கொள்ளும் கருவி என்றது ஞானேந்திரியங்களைந்தையும். மூலம் = மூலப்பகுதி. "மூலமும் அறனும் முதன்மையினிகந்த, காலமும் விசும்பும் காற்றொடு கனலும், மூவேழுலகமும் நின்மருங்கின்று" எனக் கூட்டிக்கொள்ளுதல் வேண்டும். முதன்மையினிகந்த காலம் = அநாதியான காலம். மூவேழுலகமும் நின் மருங்கின்று = மூவேழுலகத்து உயிர்களும் உன்னிடத்துள்ளன என்றபடி.

8. திருமாலுக்கு ஐவகை நிலை வேறுபாடுகள் வைணவ சமய நூல்களிற் கூறப்பட்டுள்ளன. அவை:— பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்பன. பரத்வம் = திருமால் பரம பதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகம் = படைத்தல் முதலிய தொழில்களை நடத்துதற்குக் கொள்ளும் பிரிவுநிலை. இதனைப் பாற்கடலில் உள்ள நிலை என்பர். விபவம் = அவதாரங்கள். அந்தர்யாமித்வம் = எள்ளினுள் நெய் போல் பொருள்கள் தோறும் கலந்து நிற்கும்

நிலை. அர்ச்சை = கோயில்களில் விக்கிரக வடிவமாக உள்ள நிலை. இவ்வைந்து நிலைகளும் பரிபாடலில் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன.

"...................................நின்
திருவரை அகலந் தொழுவோர்க்கு
உரிதமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து"

"நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

என்பவற்றில் அவருடைய பரத்வநிலை புலனாகின்றது.

"செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல்" (3, 81–82)

என்ற பகுதியில் வியூகநிலை கூறப்பட்டது. செங்கட்காரி = வாசுதேவமூர்த்தி. கருங்கண் வெள்ளை = சங்கருடணன், பொன்கட்பச்சை = பிரத்யும்நன். பிரத்யும்நன் என்னும் வடமொழி பச்சை எனத்திரிந்தது. பைங்கண் மா அல் = அநிருத்தன். இந் நான்கும் வியூகநிலைகளாகும். இவ்வாறு பொருள் விளக்கியுள்ளனர் பரிமேலழகர்.

மேல் எடுத்துக்காட்டியபடி பல அவதாரங்கள் கூறப்பட்டதனால் விபவ நிலை கூறப்பட்டதாயிற்று.

"வடுவில் கொள்கையினுயர்ந்தோ ராய்ந்த
கெடுவில் கேள்வியுள் நடுவாகுதலும்
இந்நிலைத் தெரிபொருள் தேரின் நின்னிலை"(2, 24-26)

என்ற பகுதியில் அந்தர்யாமியாம் நிலை கூறப்பட்டது.

"ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை யொருவனும் மடங்கலும் நீ
நலமுழுது அளைஇய புகரறு காட்சிப்
புலமும் பூவனும் நாற்றமும் நீ" (1, 43-46)

என்றாற் போன்ற பகுதிகளும் அந்தர்யாமியாம் நிலை கூறுவனவேயாம்.

பதினைந்தாவது பரிபாடலில் திருமாலிருஞ்சோலை மலையில் கண்ணன், பலராமன் இவர்கள் எழுந்தருளியுள்ள நிலை கூறப்பட்டதனால் அர்ச்சை கூறப்பட்டதாயிற்று. அன்றியும்,

"அழல்புரை குழைகொழு நிழல்தரும் பலசினை
ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்" (4, 66-69)

என்ற பகுதியில், வேறு வேறு பெயரோடு வைத்துவணங்கப் படும் வேறு வேறு தெய்வ வடிவங்களும் திருமாலின் உருவங்களே என்ற வைணவ சமயக் கொள்கை புலப்படுகின்றது. ஆலமரம், கடம்பமரம், ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவிடம்) மலை முதலிய இடங்களைப் பொருந்திய பல தெய்வங்களாக வகுத்துச் சொல்லப்படும் வேறு வேறு பெயரையுடையோய் என்பது அப்பகுதியின் கருத்து. மேற் கூறப்பட்ட இடங்களில் வேறுவேறு பெயரையுடைய வேறுவேறு தெய்வங்களாக உள்ளவனே என்றபடி. இவ்விடத்தில்

"இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்குந்தன்மூர்த்தி
நிறுத்தினன் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே"

என்ற திருவாய்மொழிப் பகுதி நினைதற்குரியது.

9. யாகத்தில் திருமாலின் நிலைமை,

"கேள்வியுட் கிளந்த ஆசானுரையும்
படிநிலை வேள்வியுட் பற்றியாடுகோளலும்
புகழியைந்து இசைமறை யுறுகனன்முறைமூட்டித்
திகழ்ஒளி ஒண்சுடர் வளப்பாடு கோளலும்
நின்னுருபு உடன் உண்டி
பிறர் உடம்படு வாரா
நின்னோடு புரைய
அந்தணர் காணும் வரவு" (2, 61—68)

என்ற பகுதி நன்றாகக் கூறுகின்றது. இப்பகுதியில் வேத முறைப்படி யாகத்தில் திருமாலுடைய உருவம், அவருடைய உணவு, அவர் வெளிப்படுந்தன்மை இவை கூறப்படுகின்றன. கேள்வி = வேதம் (சுருதி என்பதுபோல) கேள்வியுட்கிளந்த ஆசானுரை, கேள்வியுட்கிளந்த ஆடு கொளல், கேள்வியுட் கிளந்த சுடர் வளப்பாடு கொளல் எனக் கூட்டிப்பொருள் கொள்ளுதல் வேண்டும். கேள்வியுட் கிளந்த ஆசானுரை யாவது வேதத்துக் கூறப்பட்டபடி யாகத்தலைவன் சொல்லு கின்ற மந்திரம். அம்மந்திரமாவது வேதத்துள் நான்காம் வேற்றுமையை ஈறாகவுடைய தெய்வப் பெயர்ச்சொல். அதனை வைதிகர் உத்தேசத் தியாகம் என்பர். அச்சொல்லே கடவுட்கு உரு என்பது சைமினியாற் செய்யப்பட்ட வைதிக நூல் துணிபு ஆதலின், அதனை உருபு என்றார்.

படிநிலை வேள்வி = ஒன்றற்கொன்று உயர்ந்தயாகம். கேள்வியுட் கிளந்த படிநிலை வேள்வியுட்பற்றி யாடுகொளலும் = வேதத்திற் கூறப்பட்டபடி ஒன்றற்கொன்று உயர்ந்த யாகத்தில் யூபமாகநின்று யாக பசுவைப்பற்றிக் கொள்ளு

தலும். யூபம் = யாகத்தில் நடப்படும் தூண். அத்தூண் திருமாலாகச் சொல்லப்படுதலின், பசுவைப் பிணித்துக் கொள்கின்ற அதனை உண்டி என்றார்.

புகழியைந்து இசைமறை = புகழ் பொருந்திச் சொல்லப்படுகின்ற வேதமந்திரம். மறைபுறுகனல் முறைமூட்டி = மந்திரங்களால் உயர்ந்த எரியைக் கடைந்து உண்டாக்கி. திகழ் ஒளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும் = விளங்குகின்ற ஒளியையுடைய சுடரின் பெருக்கத்தை யுண்டாக்கிக்கொள்ளுதலும். ஊனக்கண்ணையுடைய மக்களுக்கு அவர் விரும்பி வழிபடும் விக்கிரகத்திலும் அந்தணர்க்கு வேள்வித்தீயிலும் யோகிகட்கு உள்ளத்திலும் ஞானிகட்கு எவ்விடத்திலும் இறைவன் வெளிப்படுதலால், யாகத் தீயின் பெருக்கத்தைத் திருமால் அந்தணர்க்கு வெளிப்படும் நிலையாகக் கூறினர். பிறர் உடம்படுவாரா நின்னொடு புரைய அந்தணர் காணும் வரவு = கடவுள் இல்லை யென்பார் உடம்படும்படியாகவும், உன் பெருமைக்குத் தகுதியாகவும், அந்தணர் காணும்படி நீ வெளிப்படும் நிலையாகும் என்றபடி. பிறர் உடம்படுவாரா = பிறர் உடம்படுவாராக. இப்பகுதியால் யாகங்களில் திருமாலுருவம், உண்டி, வெளிப்படும் நிலை இவை கூறும் முகமாக யாகமந்திரம், யாகத்தூண், யாகத்தீ இவை திருமாலேயாம் என்பது கூறப்பட்டதாகக் கொள்க.

10. 15-வது பரிபாடல் முழுதும் திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்புக் கூறுகின்றது. சிலம்பாற்றை யுடைய அம்மலை, தெய்வம் எழுந்தருளியுள்ள மலைகள் எல்லாவற்றிலும் சிறந்தது என்றும், கண்ணன் பலதேவரோடு அம்மலையில் எழுந்தருளியுள்ள தன்மையும், பெறுதற்கரிய வீடு பேற்றை அம்மலையைத் தொழுதலால் எளிதில் அடைய

லாம் என்றும், அம்மலை தன்னைத் தொழுவாருடைய அஞ்ஞானத்தைப் போக்கும் தெய்வம் என்றும், அதனைச் சென்று தொழுதல் வேண்டும் அங்ஙனஞ் சென்று தொழ இயலாதவர்கள் தூரத்திலிருந்தபடி கண்டாவது வணங்குங்கள் என்றும், சென்று தொழுந்தன்மையுடையவர்கள் தம்மனைவியரோடும், தாய் தந்தையரோடும், மக்களோடும் அம்மலையைத் தெய்வமாகக் கருதித் திசைநோக்கித் தொழுதுகொண்டு செல்லுங்கள் என்றும், வேதம் சொல்லுகிறபடி கண்ணன் பெருமை இவை என்றும் எடுத்துக் கூறி, அத்திருமாலிருஞ் சோலைமலையின் அடிவாரத்தில் வாழும் வாழ்வு தமக்குக் கிடைப்பதாக என வேண்டுகின்றார் அதனைப் பாடிய ஆசிரியர். அப் பாடலைப் பாடியவர் இளம்பெரு வழுதியார். என்ற ஒரு பாண்டிய அரசர்.

11. பரிபாடலில் திருமாலைப்பற்றிய பாடல்களைப் பாடிய ஆசிரியர்கள், அப் பெருமானிடத்தில் வேண்டிக் கொள்ளும் பயன் மிகச் சிறப்பாக உள்ளது.

> "காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை
> யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
> ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
> வாய்மொழிப் புலவநின் தாள்நிழல் தொழுதே"
> (1, 62—65)

யாம் ஏமுறு நெஞ்சத்தேமாய், காமரு சுற்றமோடு ஒருங்கு இயைந்து நின்னடியுறை ஒன்றுபு பொலிக என, வாய்மொழிப் புலவ! வைகலும் நின் தாள் நிழல் தொழுது பரவுதும் எனக்கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும். யாம் இன்புற்ற நெஞ்சத்தை யுடையேமாய், விருப்பம் பொருந்திய சுற்றத்தோடு கூடி உன் அடியின்கண் உறைதலைப்

பொருந்தி விளங்குக என, வேத முதல்வ உன் தாள் நிழலை நாடோறும் துதிக்கின்றேம் என்பது பொருள். யாமும் எம் சுற்றமும் உன் திருவடியை மறவாது மகிழ்ச்சியோடு வாழ்வே மாக என்று வேண்டுகிறார் இதனைப் பாடியவர்.

> "...நின்னடி
> தலையுற வணங்கினேம் பன்மாண் யாமும்
> கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்
> கடும்போடும் கடும்போடும் பரவுதும்
> கொடும்பாடறியற்க வெம்மறி வெனவே"
>
> (2, 72—76)

யாமும் கடும் பொடும் கடும் பொடும் நின்னடி தலையுற வணங்கினேம் பன்மாண் ஏத்தினேம் வாழ்த்தினேம் கொடும் பாடறியற்க எம்மறிவு எனப் பரவுதும் எனக் கூட்டிக் கொள்ளுதல் வேண்டும். யாம் சுற்றத்தோடு நின் அடியில் தலை பொருந்த வணங்கிப் பலகாலும் ஏத்தி வாழ்த்தி, எம் அறிவு மெய்ப்பொருளை உணர்வதாக என வேண்டிக்கொள் கின்றேம் என்பது பொருள். கொடும்பாடு அறியற்க = தீவழிப்படாதொழிக; எனவே மெய்ப்பொருளை ஆராய்ந்து உணர்வதாக என்றபடி. இதனைப் பாடிய ஆசிரியர் மெய் யறிவை வேண்டுகின்றார்.

உலகத்தில் கடவுளை வேண்டுபவரில் செல்வம், மனைவி, மக்கள், நோயின்மை முதலியவற்றில் தமக்குள்ள குறை களைச்சொல்லி, அக்குறை நீங்கிப் பயன் கிடைத்தல் வேண்டு மென வேண்டுபவரே மிகப் பலராவர். எனக்கு உண்மை ஞானம் வேண்டுமென வேண்டிக்கொள்பவர் மிக அரியராவர். இக் கருத்தை,

"அறிவினுற் குறைவில்லா அகன்ஞாலத்தவரறிய
நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி"

என்ற திருவாய்மொழிப் பகுதியில் ஆழ்வார் அழகாக விளக்கியுள்ளனர். அறிவினுற் குறைவில்லா அகல் ஞாலத் தவர் = அறிவு விஷயத்தில் மனத்திற் குறைபாடில்லாத இப் பெரிய உலகத்தவர்; எனவே பிற விஷயங்களிற் குறைபாடு உள்ளவர்கள் என்பது பெறப்படும். அவர்கள் அறியும்படி நெறியெல்லாம் (கீதையில்) எடுத்துரைத்த ஞானமூர்த்தி என்றபடி. அங்ஙனம் கூறிய ஆழ்வார்,

"எய்தா நின்கழல் யானெய்தஞானக்
கைதா காலக் கழிவுசெய் யேலே"

என ஞானத்தை வேண்டினர் பிறிதொரு பாசுரத்தில். பரிபாடலாசிரியர் மெய்யறிவைவேண்டியதும் ஆழ்வார் கருத்தும் ஒத்திருத்தல் காண்க.

"................................நின்னடி தொழுதனெம்
பன்மாணடுக்க விறைஞ்சினேம் வாழ்த்தினேம்
முன்னும்முன்னும்யாம் செய்தவப் பயத்தால்
இன்னும்இன்னும் எங்காம மிதுவே" (13, 61-64)

யாம் முன்னும் முன்னும் செய்தவப் பயத்தால் என்றெடுத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். யாம் இதற்கு முன் பல பிறப்புக்களில் செய்த தவப்பயனுல் இப் பிறப்பில் நின் திருவடியைக் கையாற் றொழுது பலமுறை தலையால் வணங்கி வாழ்த்தினேம்; மேலும் யாம் விரும்புவது இதுவே என்பது பொருள். எப்போதும் நின் திருவடியை வாழ்த்தி வணங்குவதே, யாம் வேண்டும் பயனென்றனர் இவ்வாசிரியர்.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்
தெழிகுர லருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே"

என்ற திருவாய்மொழிப் பாசுரக் கருத்து ஈண்டு நினைத்தற்குரியது. மேற் பரிபாடலிற் கூறப்பட்ட வணங்குதல் வாழ்த்துதல்களும் ஒருவகையில் அடிமை செய்தலேயாகும்.

"தொழுங்காதற் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்றதும் காண்க. தொழுங்காதற்களிறு = தொழுதலையே விரும்பிய (பிற பயனை விரும்பாத) கஜேந்திரன் என்றபடி. இத்தகையோர்களை அநந்ய ப்ரயோஜனர் என்று கூறுவது வைணவ சமய மரபு. அநந்யப்ரயோஜனர் = இறைவனை வணங்குதல், அவனுக்கு அடிமைசெய்தல் அன்றி வேறுபயன்களை விரும்பாதவர். மேல் மெய்யறிவு வேண்டியவரையும் இத்தகையோராகவே கோடல் வேண்டும்.

இங்ஙனமாகப் பரிபாடலில் திருமாலைப் பற்றிய கருத்துக்களும், வைணவசமயக்கருத்துக்களும் பலப்பல வந்திருத்தல் காணலாம்.

பத்துப்பாட்டு.

பெரும்பாணாற்றுப் படையில்,

"நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்
....
பெறற்கருந் தோல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்வி கொள்பவரோ டசைஇ யவ்வயின்
அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்"

என்று கூறப்பட்டுள்ளது. காந்தட் பூக்கள் நிரம்பிய மலையின்மேல் ஓர் யானை படுத்திருப்பதுபோல் அரவணையின் மேல் திருமால் பள்ளிகொண்டுள்ள திருவெஃகாவினிடத்து பெறுதற்கரிய பழைமையான புகழையுடைய சுவர்க்கத்தை யொத்ததும், தப்பாமல் நீர்வரும் முறைமையினை யுடையதும், பூக்கள் மிக்குள்ளதுமான துறையினிடத்து, இளவேனில் இன்பத்தை யனுபவிப்பவரோடு தங்கி இளைப்பாறி, அவ்விடத்துள்ள அரிய திறலினையுடைய திருமாலை உம்முடைய கரிய தண்டினையுடைய யாழைச் சிறிது வாசித்து வாழ்த்தி, அவ்விடத்தைவிட்டுச் செல்லுங்கள் என்று அப்பாண் குடும்பத்தினரை நோக்கிக் கூறுகின்றான்.

இந்நூல் காஞ்சிபுரத்திலிருந்து அரசாண்ட தொண்டைமானிளந்திரையன் என்ற அரசனிடத்துப் பரிசில்

பெற்றுவருகின்ற ஒருவன், இடைவழியிற்கண்ட பெரும் பாண் என்ற வகுப்பைச் சேர்ந்த ஒருவனையும் அவன் சுடும்பத்தினரையும் அவ்வரசனிடம் சென்று பரிசில் பெறுமாறு அனுப்பும் முறையில் உருத்திரங் கண்ணனார் என்ற புலவரால் பாடப்பட்டது. உருத்திரன் மகன் கண்ணனார் என்பது உருத்திரங் கண்ணனார் என்றாயிற்று.

இந்நூலில்

"இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை"

என்ற பகுதியால் அவ்வரசன் திருமாலின் வம்சத்திற் பிறந்தவன் என்று கூறப்பட்டுள்ளான். பெரிய நிலத்தை யளந்தவரும், திருவாகிய மறுவை யணிந்த மார்பினையுடையவரும், கடல்போலும் நிறத்தையுடையவருமாகிய திருமாலின் வழியாகிய சோழர் குடியிற் பிறந்தவன் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. (ஈண்டும் திருமறு மார்பின் என்பதற்குத் திருவையும் மறுவையும் அணிந்த மார்பினையுடையவர் எனக் கொள்க). ஈண்டுத் திருமால் என்றது இராமாவதாரத்தை நினைந்து கூறப்பட்டது.

மேற் காட்டியவற்றால் இவ்வரசன் திருமால் பக்தியிற் சிறந்தவன் என்றும், திருவெஃகா அவனால் நன்கு போற்றப்பட்டு வந்தது என்றும் உய்த்துணர்ந்து கோடல் வேண்டும். அதனாலேயே புலவர் அவனைச் சோழர் குடியிற் பிறந்தவன் என்று மட்டும் கூறாது திருமாலின் வழியாகிய சோழர் குடியிற் பிறந்தோன் என்று கூறியதோடு, பாணர்களைத் திருவெஃகாவிற் றங்கி, அங்குள்ள திருமாலை யாழ் வாசித்து வாழ்த்திச் செல்லுங்கள் என்றும் கூறுவாராயினர். மேலும் காஞ்சிபுரத்தைக் கூறுமிடத்து,

"வழங்குநர்த் தடுத்த
அடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவின் நேடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி"

என, திருமாலின் உந்தியில் நான்முகனைப் பயந்த தாமரை மலரின் கொட்டைபோல அழகு விளங்கத் தோன்றி என்று திருமாலின் இயைபோடு உவமை கூறிச் சிறப்பிப்பாராயினர். இவை யெல்லாம் அரசன் மனநிலைக் கேற்பக் கூறப்பட்டன வெனக் கோடலே பொருத்தமாகும்.

முல்லைப் பாட்டு.

நப்பூதனார் என்னும் புலவர் பாடிய முல்லைப்பாட்டின் தொடக்கத்தில், கார் காலத்தில் சூல் கொண்டு எழுகின்ற மேகத்திற்கு

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல"

எனத் திருமால் மாவலிபால் நீரேற்று ஓங்கி வளர்ந்த நிலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கு, நேமியொடு வலம்புரிதாங்கு தடக்கைமால், மாபொறித்தமால், நீர் செல நிமிர்ந்தமால் எனக் கூட்டிச் சக்கரத்தோடு வலம்புரியைத் தாங்கும் பெரிய கைகளையுடையவரும், திருமார்பிடத்தே

திருமகளைத் தரித்திருப்பவரும், மாவலி வார்த்த நீர் தம் கையில் சேர்ந்ததாக, ஓங்கி வளர்ந்த வருமாகிய திருமால் எனப் பொருள் கொள்வார் நச்சினார்க்கினியர். அன்றியும், சங்கு சக்கரங்களாகிய உத்தம இலக்கணங்கள் பொருந்திய, திருமகளை யணைத்த கையிலே நீர் செல்ல என மற்றொரு பொருளுங் கூறினர்.

"நனந்தலை உலகம் வளைஇ" என்பதை முதலில் மேகத்திற்கு இயைத்துக் கூறி, பின்னர் திருமாலுக்கு இயைத்து "உலகத்தைத் திருவடிகளிலே யணைத்துக்கொண்டு நிமிர்ந்தமால் என்றும் உரைப்பர்" எனக் கூறினர்.

இந்நூல் முல்லைப்பாட்டாதலின், முல்லை நிலத்திற்கு உரிய தெய்வமாகிய திருமாலை முதலில் உவமை முகத்தால் எடுத்துரைத்தனர் புலவர்.

மதுரைக் காஞ்சி.

மதுரைக் காஞ்சியில்,

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்"

எனத் திருமாலுக்குரிய திருவோண நாளில் திருவிழாக் கொண்டாடிய வழக்கம் கூறப்பட்டுள்ளது. ஈண்டுப் "பொலந் தார்" என்றது திருமால் மார்பிலணிந்துள்ள "வனமாலை" என்னும் மாலையை எனக் கொள்க.

சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்தில் திருமாலைப் பற்றிப் பலவிடங்களிற் பலவிஷயங்கள் கூறப்பட்டுள்ளன. விரிவாகக் கூறப்பட்டுள்ள இடம் ஆய்ச்சியர் குரவையாகும். கோவலன் கண்ணகியுடன் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டு மதுரை நோக்கிச் சென்றனன். வழியில் கவுந்தி என்ற சமணசமயத் தவப்பெண் துணையாகச் சேர, மூவரும் மதுரை நகரப் புறத்தே சென்று தங்கினர். அப்போது அங்குவந்த ஆயர் மகளாகிய மாதரி என்பவளிடம், கவுந்தி கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்துச் சிலநாள் காக்கும்படி கூறினள். அவள் அங்ஙனமே கண்ணகியையும் கோவலனையும் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனள். பின் கோவலன் கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் சென்றவிடத்தில், பொற்கொல்லன் வஞ்சகத்தால், பாண்டிய அரசனாற் கொல்லப்பட்டனன். அப்போது இடைச்சேரியில் தீச்சகுனங்கள் உண்டாயின. அதன் சாந்தியாக மாதரி முதலியோர் கண்ணனைத் துதித்து, அக் கண்ணபிரான் கோகுலத்தில் ஆடிய குரவைக்கூத்தை யாடினர். அதுவே ஆய்ச்சியர் குரவை எனப்படுவது. குரவை என்பது எழுபேரானும் ஒன்பது பேரானும் வட்டமாக நின்று கைகோத்தாடுவதொரு கூத்து. மதுரை இடைச்சேரியில் நடைபெற்ற இக்கூத்தில் எழுவர் கைகோத்து நின்றாடினர்.

எழுவகைச் சுரங்கள் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்படும். குரவைக் கூத்தில் கைகோத்து நின்ற எழு பெண்களையும் எழு சுரங்களாக வைத்தனர். குரல் என்னும் சுரமாக நின்ற பெண்

கண்ணனுகவும், இளி என்னும சுரமாக நின்றபெண் நம்பி மூத்தபிரானுகவும், துத்தம் என்னும் சுரமாக நின்ற பெண் நப்பின்னைப் பிராட்டியாகவும் கொண்டனர்; கண்ணனுக நின்ற பெண்ணுக்குத் திருத்துழாய் மாலையணிந்து ஆடுவாராயினர்.

குரவைக்கூத்தில் அவர்கள் பாடிய பாட்டுக்கள் பல வகையாக உள்ளன.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

என்பனவை அவர்கள் முதலிற் பாடிய பாடல்கள். இப்பாடல்களிற் கன்றால் விளவெறிந்தது, பாற்கடல் கடைந்தது, குருந்தொசித்தது ஆகிய செயல்களைக் கூறிக் கண்ணனைத் துதித்தனர். இம் மூன்றிலும் "கேளாமோ தோழீ" என்பதற்குக் கண்ணபிரானுடைய குழலோசையைக் கேட்போம் என்று பொருள் கூறினர் உரைகாரர். திருவாய்மொழியில் உள்ள "மின்னிடை மடவார்" என்று தொடங்கும் பதிகம்போல ஊடற் குறிப்போடு கேட்கமாட்டோம் என்றதாகப் பொருள் கூறலாம். அப்பொழுது, கேளாம் = கேட்கமாட்டோம் என்று பொருள்கூறி ஓகாரம் அசைநிலையாகத் தள்ளிவிடுதல் வேண்டும்.

1. "கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்"

2. "பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன் [டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையான் என்பரால்"

3. "முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக் கடல்கடைந்தான்" என்பரால்

1. கோவாமலையாரம் = சந்தனம். கோத்தகடலாரம் = முத்துமாலை. தேவர்கோன் பூணாரம் = இந்திரன் பாண்டியனுக்கு அளித்ததொரு ஆபரணம். சந்தனமும், முத்துமாலையும் இந்திரன் ஆபரணமும் அணிந்தவன் பாண்டியன். ஆயர்பாடியில் ஆநிரை மேய்த்தும், குருந்த மரத்தை ஒடித்தும் விளையாடிய கண்ணபிரானே அப்பாண்டியனாக உள்ளவன் என்பது முதற்பாடலின் கருத்து.

2. புலிக்கொடி சோழர்க்குரியது. புகார் = காவிரிப்பூம் பட்டினம். புகார் நகரைத் தலைநகராகக்கொண்ட சோழன் இமயம் வரையில் வென்று அம் மலையில் தன் புலிக்கொடியைப் பொறித்து உலகையாண்டனன். பொன்னாழியை வலக்கரத்து ஏந்திய இறைவனே அச்சோழனாக உள்ளவன் என்பது இரண்டாவது பாடலின் கருத்து.

3. வஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்ட சேரன் கடற்படையோடு சென்று, கடல் நடுவிலிருந்த தன் பகை வரை யழித்து அவர்களுடைய காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டித்தள்ளினன். பாற்கடல் கடைந்து தேவர்க்கு அமுதம் அளித்த திருமாலே அச்சோனாக உள்ளவர் என்பது மூன்றாவது பாடலின் கருத்து. இம்மூன்று பாட்டுக்களிலும் தமிழ்நாட்டில் விளங்கிய முடியுடை வேந்தர்களாகிய பாண்டியன், சோழன், சேரன் ஆகிய மூவரையும் புகழ்ந்து அம் மூவரும் திருமாலின் அம்சமாக உள்ளவர் என்று விளக்கி யுள்ளனர்.

திருக்குறள் பொருட்பாலில் முதலதிகாரம் இறை மாட்சி என்பது. இறைமாட்சி = அரசனுடைய நற்குண நற்செயல்கள். இறைவன் என்பது கடவுளுக்கே யுரிய பெயர். அதனை அரசனுக்கு இட்டுவழங்குவது உபசார வழக்காகும். பரிமேலழகர் "உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின் (அரசனை) இறை என்றார் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்று பெரியாரும் பணித்தார்'' என்று விளக்கினர். "திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்பது நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய் மொழியில் நான்காம்பத்து நான்காம் ப்ாசுரமாகும். காட்டப்பட்ட (பாண்டிய சோழ சேரர்களைக் குறித்த) பாட்டுக்கள் மூன்றி னும் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற ஆழ்வார் அருளிச் செயலின் கருத்து நன்கு விளங்குதல் காண்க.

1. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருகாற் கடல்வயிறுகலக்கினையே

கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கண்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே

2. அறுபொரு ளிவனென்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசியோன் றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினா னுறி வேண்ணெ 'புண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

3. திரண்டமரர் தொழுதேத்த திருமால் நின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

இம்மூன்று பாட்டுக்களிலும் திருமாலை முன்னிலைப் படுத்தித் துதித்துள்ளனர். அதனால் இவற்றுக்கு முன்னிலைப்பரவல் என்றுபெயர்.

1. கடல்வண்ணனே, முன்பு ஒருநாள் வடவரையை மத்தாக நாட்டி வாசுகி என்னும் பாம்பைக் கடைகயிறாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்து தேவாக்கு அமுதம் அளித்தனை! அங்ஙனம் பாற்கடல் கடைந்த உன்னுடைய கைகள் ஆயர்பாடியில் யசோதையார் கடைகயிற்றால் கட்டப்பட்டன இஃதென்னமாயமோ! ஆச்சரியமாக இருக்கின்றது. தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் மேற்றொருபுறமுமாக நின்று பாற்கடலைக் கடைந்தனர் என்பது கதை- இங்குத் திருமாலே பாற்கடல் கடைந்தனர் என்று கூறினர். தேவர்களும் அசுரர்களும் இருபுறத்தும் நின்று கடைந்தபோது இருவகையாரும் தளர்ந்துவிட்டனர். அப்போது திருமால் இரண்டு உருவங் கொண்டு இருபாலும் நின்று கடைந்தனர் என்று வேறு நூல்கள் கூறும். இதனைத் திருவாய்மொழி வியாக்கியானத்

திலும், திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய திருவரங்கத்து மாலையிலும் காணலாம். பாறகடல் கடைந்த காலத்தில் தேவர்கள் இளைத்தபோது வாலி தேவர்கள் பக்கம் நின்று கடைந்து உதவிபுரிந்தனன் என்று கம்பராமா யணம் கூறுகின்றதேயெனின், அதன் பின் இருதிறத்தாரும் இளைத்தபோது திருமால நின்று கடைந்தனர் எனக் கொள்க. திருமால் தலைமையில் பாற்கடல் கடையப் பெற்றதனுல் இவரே நின்று கடைந்தனர் என்று உபசார வழக்காற் கூறினர் என்றும் கொள்ளலாம். கடல் வயிறு கலக்கிய கையை யசோதையார் காட்டினர் என்றது யசோதையாற் கட்டுண்கை என்றதன் குறிப்பால், திருமால் அவதாரமாகிய கண்ணனை யசோதையார் கட்டும ஆற்றலிலர்; ஆயினும் யசோதையாருடைய அன்பு நோக்கிக் கண்ணன் தன்னைக்கட்டுமாறு தானே தன்னை யமைத்துக்கொண்டனன் என்பது புலப்படும். "கண்ணிநுண் சிறுத்தாம்பினுற் கட்டுண்ணப், பண்ணிய பெருமாயன்" என்ற மதுரகவிகள் அருளிச்செயல் காண்க. கண்ணன் யசோதை யன்பாற் கட்டப்பட்டதை எடுத்துக்கூறி அது நினைந்து மூர்ச்சித்தனர் நம்மாழ்வார் என்பர் பெரியோர்.

2. பிரளய வெள்ளத்தில் அழியாதபடி எல்லாவுலகத் திலுமுள்ள எல்லா உயிர்களையும் பசியின்றி உண்டனை. அங்ஙனம் உண்டவாய் ஆயர்பாடியில் களவினுல் வெண்ணெய் கொண்டு உண்டது என்ன மாயமோ? ஆச்சரியமாக இருக் கின்றது. அறுபொருள் = அற்ற பொருள் — ஐயமற்ற பொருள் = முதற் பொருள் இவனே வேறொருவனே என்று ஐயமுறுதபடி துணிந்த பொருள் என்றபடி; இனி அற்ற பொருள் = முடிந்த பொருள் என்றும், அறுவகைச் சமயத் தோராலும் துணியப்பட்ட பொருள் என்றும் கூறலாம்.

உறுபசி யொன்றின்றியே உண்டனன் என்றதனால் தன் அருளினால் உண்டனன் என்பது கருத்து. அச் செயல் கண்டு தேவரெல்லோரும் இவனே முதற் பொருள் என்று உணர்ந்து கையாற்றொழுது வாயினால் துதிப்பாராயினர் எனக் கொள்க.

3. மாவலியால் துன்புற்ற தேவரெல்லோரும் திரண்டு தங்கள் துன்பத்தைப்போக்கி யருளுமாறு தொழுது துதிக்க, திருமாலே! நின் செந்தாமரைபோன்ற இரண்டு அடிகளால் மூவுலகங்களையும் அளந்தனை. அங்ஙனம் அளந்த திருவடிகள் பாண்டவர்க்காகத் தூதுநடந்தன. இஃதென்ன மாயமோ? ஆச்சரியமாக இருக்கின்றது. தேவர்கள் மாவலியால் துன்புற்றுத் திருமாலை யடைந்து தங்கள் துன்பம் போக்குமாறு வேண்டினர். அவர்கள் துன்பத்தை நோக்கினால் மாவலியை அழித்தல்வேண்டும். மாவலியோ கொடை என்னும் பெருங் குணமுடையவனாகவிருந்தான்; அக்குணம் நோக்கின் அவனை யழித்தலாகாது; இரண்டுக்கும் ஏற்பத்தான் இரப்பாளனாகி மூவடி மண் ஏற்று உலகை யளந்துகொண்டு தேவர் துன்பம் போக்கினர் திருமால் எனக் கொள்க. திருமால் முதற் பொருளோ இல்லையோ என்ற ஐயம் உலகளந்த செயலால் நீங்கிற்றாதலின் இருள்தீர நடந்தனை என்றார். இருள் = உலகத்தாருள்ளத்து ஐயம். இனி, இருள்தீர = தேவர்களுடைய துன்பமாகிய இருள்தீர என்றுமாம். நரசிங்கமாகி இரணியனைக் கொன்று தேவர்கள் துயர் நீக்கிய மற்றொரு செயலை "மடங்கலாய் மாறட்டாய்" என்று விளியில் அமைத்துக் கூறினர். இம்மூன்று பாட்டுக்களில் ஒவ்வொன்றிலும் இறைவனுடைய உயர்வற உயர்ந்த பெருமையும், அடியார்க் கெளியனாகிய நீர்மையும் ஒருங்கு விளங்குதல் காண்க. இங்ஙனம் அமைத்துக் கூறுதலை, "வளவேழுலகின் முதலாய வானோரிறையை

அருவினையேன், களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன” என்றாற்போல ஆழ்வார் பாசுரங்களிற் பரக்கக் காணலாம்.

1. மூவுலகு மீரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியோடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழி[த்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே

2. பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே

3. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே

இம்மூன்று பாட்டுக்களிலும் திருமாலைப் படர்க்கையாக வைத்துத் துதித்துள்ளனர். அதனால் இவற்றிற்குப் படர்க்கைப் பரவல் என்று பெயர்.

1. மூவுலகங்களும் இரண்டடிக்குப் போதவில்லை என்னும்படி ஓங்கி வளர்ந்து அளந்த சேவடி சிவக்கும்படி தம்பியாகிய இலக்குவனோடு காடுசென்று பழைமையான இலங்கையின் காவலையழித்த வீரனுடைய புகழைக் கேளாத செவி என்ன செவி? அங்ஙனம் இராமனாகப் பிறந்த திருமால்

புகழைக் கேளாத செவி என்ன செவி? செவி என்பதற்குத் தகுதியுடையவனல்ல என்றபடி. மூவுலகங்களும் அவன் திருவடிகட்குப் போதியனவாக இருக்கவில்லை. ஆனால் இவ்வுலகங்களை அளப்பதற்கு வேண்டிய அளவாக அவன் திருவடிகள் வளர்ந்தன என்னும் கருத்துத் தோன்ற "மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடியத் தாவிய சேவடி" என்றார். "படிக்களவாக நிமிர்ந்த நின் பாதபங்கயம்" என்பது காண்க. (திருவாய்மொழி). "தம்பியொடும்" என்றவிடத்துச் சீதையொடும் என்பது உபலக்ஷணமாகக் கொள்க. "சோவரணும் போர்மடிய" என்பது இடைப்பிறவரலாக வந்த மற்றொரு நிகழ்ச்சியாகும். இலங்கை நெடுங்காலமாகவே அரக்கர் குடியிருப்பாக இருந்ததனால் தொல்லிலங்கை என்றார். வேறுயாரும் அணுகமுடியாத காவலையுடையதாக இருந்த சிறப்புத் தோன்ற இராவணனைக்கொன்ற என்னாது இலங்கையின் காவலையழித்த என்றார்; எனினும் இராவணனைக்கொன்ற என்பதே கருத்தாகும். இவர், கேட்பதற்குரியது இராமபிரான் புகழே என்றனர்; "கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ" எனக் கற்பதற்குரியது இராமபிரான் புகழே என்றனர் நம்மாழ்வார். (எனவே கற்றல் கேட்டல் எல்லாவற்றுக்கும் இராமபிரான் புகழே தக்கது எனக் கொள்க).

2. எல்லாத் தேவரினும் பெரியவனை, மாயங்களை வல்லானை, உலகமுழுதும் விரிந்து தோன்றுதற்குரிய உந்திக் கமலத்தையுடைய விண்ணவனை, திருக்கண்கள் முதலிய உறுப்புக்கள் செம்மைநிறமாகவும் திருமேனி கருமை நிறமாகவும் உள்ளவனை, காணாத கண் என்ன கண்? கண் இமைத்துப் பிற பொருள்களைக் காண்பார் கண் என்ன கண்? அவை கண் என்பதற்குத் தகுதியுடையனவல்ல என்றபடி. தேவர்

எல்லோராலும் தொழப்படும் முதற்கடவுள் என்பார் பெரிய வனை என்றார். மாயவன் என்பதற்கு ஆச்சரியமான குணஞ் செயல்களையுடையவன் எனப் பொருள் கூறுவர் பெரியோர். எல்லா உலகங்களையும் படைத்தலும் அழித்தலும் திருமால் முயன்று செய்யும் காரியங்கள் அல்ல என்னுங் குறிப்புத் தோன்றப் "பேருலகமெல்லாம் விரிகமல வுந்தி" என்றார். உந்திக் கமலம் விரிந்தால் உலகங்கள் தோன்றுகின்றன; அது குவிந்தால் உலகங்கள் அழிகின்றன என்பது கருத்து. "கண்ணுந் திருவடியும் கையும் கனிவாயும்" என்ற முறை வைப்புப் பொருத்தமுடையது. திருமாலின் கண்ணழகு மிக்க சிறப்புடையதாகலின் அதனை முதற்கட் கூறினார்; அக் கண்ணழகைக் கண்டு மகிழ்ந்து மனம ஈடுபட்டவர் வீழ்ந்து வணங்குதற்குரியது திருவடியாதலின் அதனை அடுத்து வைத்தார்; அங்ஙனம் வீழ்ந்து வணங்கியவர்களை எடுத்து அணைப்பது கையாதலாலும் அஞ்சற்க எனக் கூறுவது வாயாதலாலும் திருவடிக்குப் பின் கையும் கனிவாயும் கூறினர்; "அப்பொழுதைத் தாமரை நின் கண் பாதம் கை கமலம்" என்பது திருவாய்மொழி.

3. அறிவின்மை தங்கிய நெஞ்சத்தையுடைய கஞ்ச னுடைய வஞ்சகச் செயல்களை எல்லாம் வென்றவனை, பாண்ட வர்கட்காகத் துரியோதனனிடத்துத் தூது சென்றவனை ஏத்தாத நா என்ன நா? நாராயணா என்னாத நா என்ன நா? நா என்பதற்கு உரியதன்று என்றபடி. மடந்தாழும் நெஞ்சம் அறியாமை நிலைபெற்ற நெஞ்சம். கஞ்சன் கண்ணன் இயல்பை உணராமல் மேலும் மேலும் அசுரரை அனுப்பிக் கொல்ல முயன்றனன்; ஆதலால் அவனை அறியாமை நிலை பெற்ற நெஞ்சையுடையவன் என்றார். இழிவுக்குறிப்புத் தோன்றக் கஞ்சனார் என்றார். அவன் அனுப்பிய அசுரர்களை

யெல்லாம் கொன்று இறுதியாக அவனையும் அழித்தானாத லின், அவன் விட்ட அசுரர்களை அழித்தான் என்றது அவன் வஞ்சங் கடந்தானை என்றார். இவர்களை அழித்தது கண்ண னுக்கு ஓர் அரிய காரியமன்று; மிக எளிய காரியம் என்பது தோன்றக் "கடந்தானை" என்றார். கண்ணன் பாண்டவர்க் காகத் தூது செல்லும்போது தேர்மீதேறிச் சென்றனன் எனப்பாரதம் கூறுமாயினும் அடியார்க்கு எளியனாக நிற்கும் அப்பெருமானுடைய குணச் சிறப்புத் தோன்றத் தூது நடந்தானை என்றார். கண்ணன் பாண்டவர்க்காகத் தூது சென்றனன்; அது குறித்துப் போற்றுதற்குரியார் பாண்ட வராவர்; ஆயினும் அவனுடைய உயர்வற உயர்ந்தபெருமை யும், அடியார்க் கெளியனாக நிற்கும் அவனது பெருங்குண மும் கருதி, இச்செயலுக்கு உலகம் போற்றுகின்ற தாதலின 'நாற்றிசையும் போற்றத் தூது நடந்தானை' என்றார்.

"பின்னோர் தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதன் என நின்றான் எவ்வுட் கிடந்தானே"

என இதனைப் பாராட்டிப் பேசுவர் பெரியோர். (இன்னார் தூதன் = பாண்டவ தூதன் என்ற பெயர்கருதியது) அப் பெருமானுடைய பெருமை ஒருவாறு அளவிட்டுக் கூறினும் கூறலாம்; அடியார்க்கெளியனாக நிற்கும் நீர்மை அளவிட்டுக் கூறுதற்குரியதன்று என்பது தோன்றத் "தொடர்ந்தாரண முழங்கத் தூது நடந்தானை" என்றார். "கூறுதல் ஒன்றாராக் குடக்கூத்த அம்மானை" என்பர் நம்மாழ்வார். (குடக்கூத்தா டிய செயல் ஒன்றுமே அளவிட்டுக் கூறிமுடித்தற் குரிய தன்று என்பது கருத்து).

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழின் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என்றனர் குமர குருபர அடி கள் "தொல்லிலங்கைக் கட்டழித்த சேவகன் சீர்கேளாத

செவியென்ன செவியே" என இராமபிரான் செயலை எடுத்துக் கூறி அதனைத் தொடர்ந்து திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே" என்றார். "தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே" எனக் கண்ணன் செயலை எடுத்துக்கூறி அதனைத் தொடர்ந்து "நாராயணா என்னா நாவென்ன நாவே" என்றார்; இவற்றால் திருமால் என்ற தமிழ்ப் பெயராலும் நாராயணன் என்ற வடமொழிப் பெயராலும் கூறப்படும் முதற் பொருள் ஒருவனே; அவனே இராமபிரானாகவும் கண்ணனாகவும் அவதரித்தனன் என்பது இளங்கோவடிகள் கருத்தாதல் தெளிவாம். குரவைக்கூத்து முடிந்தபின் மாதரி திருமாலைப் பூ முதலியன இட்டு வணங்குதற்கு நீராடச் சென்றபோது "நீடுநீர்வையை நெடுமாலடி யேத்த" என்றொரு அடி கூறப்பட்டுள்ளது. இங்கு "நெடுமால்" என்றதற்கு ஸ்ரீ இருந்த வளமுடையார் கோயில் என்று அரும்பத உரைகாரரும், அந்தரவானத் தெம்பெருமான் என்று அடியார்க்கு நல்லாரும் கூறினர். இங்ஙனம் கூறப்பட்ட கோயில் மதுரையிலுள்ள கூடலழகர் கோயிலேயாம் என்பது அறிஞர் கொள்கை. அக்காலத்து மதுரையில் திருமால் கோயிலும் பலதேவர் கோயிலும் இருந்தன என்பது,

> "உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
> மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்"

என்ற பகுதியாலும் பெறப்படும். உவணம் = கருடன். மேழி = கலப்பை. நியமம் நகரம் என்பன கோயிலுக்குரிய பெயர்கள். இங்ஙனமே இவ்விருவர் கோயிலும் காவிப்பூம் பட்டினத்திலும் இருந்தன என்பது.

> "வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீலமேனி நெடியோன் கோயிலும்"

என்ற பகுதியால் அறியலாம்.

"அணிகிளரரவின் அறிதுயிலமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து"

எனக் காவிரிப்பூம்பட்டினத்துத் திருமால்கோயில் மற்றுமோரிடத்தில் கூறப்பட்டுள்ளது.

இனி, ஆய்ச்சியர் குரவை தவிர வேறிடங்களில் வந்துள்ள குறிப்புக்களைக் கூறுகின்றேன். இச் சிலப்பதிகாரத்தில் திருமால் கோயில்கொண்டுள்ள திருவரங்கம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலைமலை மதுரை காவிரிப்பூம்பட்டினம் திருவனந்தபுரம் ஆகிய ஆறு இடங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மதுரையும் காவிரிப்பூம்பட்டினமும் முன்னே கூறப்பட்டன.

"நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்ததுபோல
ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர் தொழுதேத்த
விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்பது திருவரங்கத்தைப்பற்றிய பகுதியாகும். ஒரு பெரிய பொன்மலையின் மீது ஒரு நீலமேகம் அம்மலையளவாகப் படிந்தாற்போல, படம்விரித்தெழுந்த ஆயிரம் தலைகளையும், பகைவர் அணுகுதற்கரிய வலிமையினையும் உடைய பாம்பணையின் மீது, தேவர்கள் பலரும் தொழுதேத்தத் திருமகளை மார்பிற் கொண்ட திருமால் கிடந்த திருக்கோலமாக எழுந்தருளியுள்ள நிலையும் என்றபடி. துருத்தி = ஆற்றிடைக்குறை. காவிரியாற்றின் இடையேயுள்ள திருவரங்கம். பால்விரிந்தகலாது = பக்கங்களில் விரிந்து பரவாமல், "நீலமேகம் நெடும்பொற்

குன்றத்துப் பால்விரிந்தகலாது படிந்ததுபோல'' என்ற தனால், ஆதிசேடன் திருமாலுக்கேற்ற அளவாக இருக்க வில்லை; திருமால் ஆதிசேடனுக்கேற்ற அளவாகத் தன்னை யமைத்துக் கொண்டுள்ளார் என்பது பெறப்படும்.

"வீங்குநீ ரருவி வேங்கடமென்னும்
ஓங்குயர் மலயத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்கு விற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்றவண்ணமும்"

என்பது வேங்கடத்தைப் பற்றிய பகுதியாகும். இதன்கண் திருமால் திருவேங்கடத்தின்கண் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியுள்ள நிலைமை மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு நீலமேகம், ஞாயிறும் திங்களும் தன் இருபக்கத்தும் விளங்க, மின்னலை ஆடையாக உடுத்து, இந்திரவில்லை மார் பில் ஆரமாகப் பூண்டு நின்றாற்போலுள்ளது திருமால் திரு வேங்கடத்தில் எழுந்தருளியுள்ள தோற்றம் என்றார். திரு மால் திருமேனி மேகம்போலவும், அவர் இரண்டு கைகளிலும் ஏந்தியுள்ள சக்கரமும் சங்கும் ஞாயிறும் திங்களும் போலவும் அவருடுத்த பொன்னுடை மேகத்தைச்சூழ்ந்த மின்னல் போல வும், அவர் மார்பிலணிந்த ஆரம் இந்திரவில் போலவும் உள்ளன என்றபடி. பகையணங்காழி = பகைவர்க்குத் துன்

பத்தைச் செய்யும் ஆழி; பகைவராவார் = இறைவன் அடியார்களைத் துன்புறுத்தும் தீயோர். தகைபெறுதாமரைக்கை = அழகுபொருந்திய தாமரை மலர் போன்ற கை. தகை என்பதனைக் கைக்கும் இயைக்கலாம், அப்போது, அழகு பொருந்திய கை தாமரை மலர் போன்ற கை எனக் கூட்டிக் கொள்ளவேண்டும். செங்கண் நெடியோன் = சிவந்த தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடைய நெடியோன். உலகளந்த காலத்து ஓங்கி வளர்ந்த தன்மை கொண்டு நெடியோன் என்றார் என்றேனும், அறிவார் அறிவுக்கு அப்பாற்பட்டவன் என்பது கொண்டு நெடியோன் என்றார் என்றேனும் கொள்க. "மனனகமலமறமலர்மிசை யெழுதரும், மனன் உணர்வளவிலன்" "சேயோன் எல்லா வறிவுக்கும்" என்றார் நம்மாழ்வார். "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" எனத் திருமால் எழுந்தருளியுள்ள வேங்கடம் மற்றுமோரிடத்தும் கூறப்பட்டுள்ளது. திருமால் திருவனந்தபுரத்தில் எழுந்தருளியுள்ள கோயில் ஆடகமாடம் என்று கூறப்பட்டுள்ளது.

திருமால் கோயில்கொண்டுள்ள திருமாலிருஞ்சோலை மலையைப்பற்றிப் பற்பல செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சில குறிப்புக்கள் மட்டும் ஈண்டுக் கூறுகின்றேன். திருமாலிருஞ்சோலைமலை என்று பரிபாடல் கூறுகின்றது. திருமால் எழுந்தருளி யிருத்தலானும், பெரிய சோலைகள் மிகுதியாக இருத்தலானும் திருமாலிருஞ்சோலைமலை என்று பெயர் உண்டாயிற்றுப் போலும். சிலப்பதிகார ஆசிரியர் திருமால் குன்றம் என்று கூறுகின்றனர். அங்குப் பாய்கின்ற சிலம்பாறு, திருமால் கோயில், கருடக் கொடிமரம் முதலியன சிறப்பாகக் கூறியுள்ளனர். ஆண்டு எழுந்தருளியுள்ள திருமால் (அழகர்) தன்னை வணங்குபவருடைய பிறவித் துன்பத்தைப் போக்குவார் என்றும், அவரை வணங்குவோர், தாம்

வீடுபேறெய்துதல் மெய் என உறுதிகொள்ளலாம் என்றும் கூறியுள்ளனர். "தன் மன்னு நீள்கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" என நம்மாழ்வார் உறுதிகொண்டாற் போல உறுதிகொள்ளலாம் என்று கொள்க.

கோவலன், தான் மாதவியினிடத்துக்கொண்ட காமத்தால் பொருளெல்லாமிழந்து, மனைவியுடன் தன் நாடுநீங்கி வேற்றுநாடடைந்து சிறுமையுற்றேன் என்று வருந்தினன். அங்குத் துணையாகவிருந்த கவுந்தியடிகள் அவனைத்தேற்றும் பொருட்டு இராமபிரான் சரிதத்தை எடுத்துக் கூறியவிடத்து, இராமபிரானை "வேதமுதல்வற் பயந்தோன்" என்றனர். வேதமுதல்வற் பயந்தோன் = பிரமனை உந்திக் கமலத்தில் தோற்றுவித்தவன்.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகள் துணையோடு மதுரை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது, கோவலனைத் தேடிக்கொணரும் பொருட்டு மாதவியால் அனுப்பப்பட்ட கௌசிகன் என்னும் அந்தணன், கோவலனைக்கண்டு, மாதவி கொடுத்த முடங்கலைக் (ஓலை) கொடுத்துச் சிலவிஷயங்கள் கூறினன். கோவலன் கண்ணகியோடு காவிரிப்பூம்பட்டினத்தைவிட்டு நீங்கியதறிந்து, அவ்வூரிலுள்ளார் மிக்க துன்பமடைந்ததற்கு, இராமபிரான் காடுசென்றது குறித்து அயோத்திமா நகரத்து மக்கள் துன்புற்றதை உவமையாக எடுத்துக் கூறினன்.

"பெருமகன் ஏவலல்லது யாவதும்
அரசே தஞ்சமேன் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும் பேதுற்றதும்"

என்பது அப்பகுதியாகும். பெருமகன் = தசரதன். அருந்திறல் = இராமபிரான். தஞ்சம் = எண்மை—பெரியதாக மதிக்கத்தக்கதன்று என்றபடி. தசரதன் கட்டளையாயின் அது சிறு தொழிலாயினும் பெரிதாகப் போற்றிச் செய்யத்தக்கது. கட்டளை இல்லையாயின் உயர்ந்த அரசே யாயினும் அது பெரிதாக மதிக்கத்தக்கதன்று; மிகச் சிறியதாகும் என்று கருதிக் காடுசென்ற இராமபிரானைப் பிரிந்த அயோத்திமா நகரத்துள்ளார், அப் பெருமான் பிரிவால் துன்புற்று வருந்தியது போலக் கோவலனையும் கண்ணகியையும் பிரிந்த காவிரிப்பூம் பட்டினத்துள்ளார் துன்புற்று வருந்தினர் என்றபடி. இதனால் அயோத்திமாநகரத்து மக்கள் இராமபிரானிடத்துக் கொண்டிருந்த ஆர்வம் விளங்குவதாகும்.

திருக்குறள்.

திருக்குறளிலுள்ள வைணவ சமயக் குறிப்புக்களைப் பிறர் விரிவாக எழுதியிருத்தலால் சுருக்கமாக ஈண்டுக் கூறுகின்றேன். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் எல்லோருக்கும் பொதுவாக விளங்கும்படி தமது திருக்குறளை இயற்றியுள்ளாராயினும், அவர் சமயக் கொள்கை ஆங்காங்கு வெளிப்படாமலிருக்கவில்லை. அவர் தமது நூலில் இரண்டிடத்தில் திருமாலைச் சிறப்பாக எடுத்துக் கூறினர்.

"தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு."

என்ற குறளில் இவ்வுலக இன்பங்களுள் தலை சிறந்த இன்பத்திற்கு உவமையாகக் கூறத்தக்கது திருமால் உலகத்ததாகிய பேரின்பமே என்று கருதிப் பரமபதத்தை எடுத்துக்கூறினர்.

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு"

என்ற திருக்குறளில் திருமால் உலகளந்த செயலைக் கூறினர். இக்குறளில் சோம்பலில்லாத அரசன் உலக முழுதும் தன் குடைக்கீழ் ஆள்வான் என்பதே கூறவேண்டிய கருத்து. அதற்குத் திருமால் அளந்த உலக முழுதும் என்று கூற வேண்டுவதில்லை. அங்ஙனம் வேண்டாதவிடத்து எடுத்துக் கூறியதனால், அவர் திருமாலிடத்துக்கொண்ட அன்பினால் அவ்வாறு கூறினர் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

"அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்ற முதற் குறளில் கடவுளுக்கு அகரத்தை உவமை கூறினர். "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையில் நச்சினார்க்கினியர் அகரம் திருமாலை உணர்த்தும் எழுத்து என்று தெளிவாகக் கூறியுள்ளனர். இவை நிற்க,

திருவள்ளுவர் வீடு பேறுபற்றி என்ன கொள்கையுடையர் என்றாராய்ந்தறிவது நன்றாகும். பரமபதம் என்பது அழிவில்லாத ஒரு தனியுலகம்; அதனையடைவதே மீண்டும் பிறவாத முடிவான பயனாகும் என்பது வைணவ சமயக் கொள்கை. திருவள்ளுவரும் முடிவான பயன் ஒரு தனியுலகமாகவே கூறியுள்ளனர். முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில், கடவுள் வாழ்த்திற்குப் பயன் கூறுகின்றவர்,

"மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்"

என்ற குறளில் இறைவன் திருவடிகளைச் சேர்ந்தார் எல்லா உலகங்களினும் மேலாய வீட்டுலகத்தின்கண் நீடு வாழ்வார் என்ருர். நீடு வாழ்வார்—பிறவி நீங்கி வாழ்வார். இவ்வாறே

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற் கோர்வித்து"

"யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்ற குறட்பாக்களில் வரனென்னும் வைப்பு, வானோர்க்கு உயர்ந்த உலகம், வானம் என்றவைகளெல்லாம் வீட்டுலகத்தைக் குறித்தனவேயாம். இராமாநுசராற் சீர்திருத்தம் செய்யப்பெற்று விளங்குகின்ற இப்போதுள்ள வைணவசமய முறைப்படி திருவள்ளுவர் இருந்தார் என்று கூறுதல் இயலாது; ஆயினும், சில முக்கியமான வைணவ சமயக் கொள்கைகள் திருவள்ளுவனர் கொள்கைகளாக விருந்தன என்று கொள்ளுதல் சிறிதும் முரணுகாது.

இறுவாய்.

மேற்கூறியவற்ருல் தொல்காப்பியருக்கு முற்காலந் தொட்டுச் சிலப்பதிகார காலம் வரையிலுள்ள பழந் தமிழ்க் காலத்தில் தமிழ் நாட்டில் திருமால் வழிபாட்டு முறை எவ்வளவு பரவியிருந்தது என்பது தெளிவாகும்.